Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா6.00

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303,K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 13 (10.10.2003) வெள்ளிக்கிழமை இதழ்:10

# அயர்லாந்து நாடாளுமன்றுக்கு புலிகளின் பிரதிநிதிகள் விஜயம்!

(டப்ளின்)

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபை இறுதி செய்வதற்கான கலந்துரையாடலை டப்ளினில் மேற்கொண்டிருக்கும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழுவினர், நேற்று ஐரிஷ் நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தனர்.

சின் பெயின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழைப் பின்பேரிலேயே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தின்போது, தற்போதைய அரசியல் நிலை குறித்து அங்கு விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

புலிகள் தரப்புக் குழுவினருடன் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச பணிக் குழுவின் தலைவர் பீற்றர் பொயில், அரசியலமைப்புச் சட்ட நிபுணர்களான அன்ரனி றீகன், கிளெம் மக்காட்னி ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, சின்பெயின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும், இடைக்கால நிர்வாகம் குறித்தும் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.


ஐரிஷ் நாடாளுமன்ற விஜயத்தின்போது புலிகள் தரப்புக் குழுவினர்.

# தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மோதல்; கிண்ணியாவில் ஊரடங்குச் சட்டம் அமுல்!

## கலவரங்களில் பத்துப் பேர் காயம்

(திருகோணமலை)

**திருகோணமலை - கிண்ணியா பிரதேசத்தில், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட மோதல்களை அடுத்து ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து நேற்று மாலை முதல் அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.**

இந்தச் சம்பவத்தில் பத்துப் பேர் படுகாயமடைந்து திருகோணமலை வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் ஆபத்தான நிலையில் உள்ளதாக திருகோணமலை மாவட்ட பொலிஸ் அதிகாரி சமரவீர தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் கிண்ணியா பிரதேசத்தில் தமிழ் மக்கள் இருந்த காணிக்குள் கிண்ணியா பிரதேசத்திலுள்ள அல் இர்பான் பாடசாலை மாணவர்கள் சென்று இது பாடசாலைக்குரிய காணி, எனவே தமிழர் இங்கிருந்து அகல வேண்டுமெனக் கூறினர். இந்தச் சம்பவத்தில் அங்கு இருந்த தமிழரான இலங்கேஸ்வரன் (வயது 29) என்பவர், இது தமிழர்களுடைய காணி நாம் ஏன் எழும்பவேண்டுமெனக் கேட்டுள்ளார். இதற்கு அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ உறுப்பினர் ஒருவர் மன்னாரில் வெட்டிக்கொலை

(மன்னார்)

மன்னார் - இலந்தைமோட்டைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு ரெலோ உறுப்பினர் ஒருவர் இனம் தெரியாதவர்களால் வெட்டிக் கொல்லப் பட்டார்.மன்னார் - நொச்சிக் குளத்தைச் சேர்ந்த எஸ்.மணியம் (வயது47) என்பவரே வெட்டிக்கொல்லப்பட்டவராவார்

சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம். அப்துல்லா கொலை தொடர்பான மரணவிசாரணைகளை நடத்தினார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திய நீதிவான், உரியவர்களை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

மேலதிக விசாரணைகளுக்காக சடலம் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (201)

## இராணுவ பிரதி தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட!

(கொழும்பு)

இராணுவத்தின் புதிய பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக் கப்பட்டுள்ளார்.

பிரதி இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி வகித்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திர பதவியில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இந்தப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் தனது கடமைகளை - சமயச் சடங்குகளின் பின்னர் பொறுப்பேற்றதுடன், தனது அலுவலகத்தில் இராணுவ அதிகாரிகளுக்கு தேநீர் விருந்து வழங்கிக்



(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் எம்மைத் தாக்கினால் அதனை முறியடிக்கத் தயார்!

### திருமலை கட்டளைத் தளபதி சுனில் தென்னக்கோன்

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவொரு தாக்குதலையும் முறியடிக்க தாம் தயாராக இருப்பதாக, திருகோணமலை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

குரங்குபாஞ்சான் முகாமுக்கு சென்று திரும்பிய ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்ன கொட தெரிவிக்கையில், திருமலைத்துறைமுகத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

கடலில் நடைபெறும் அனைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரிகள் குழு யாழ்.குடாநாட்டு நிலைமையை ஆராய்வு!

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் யாழ்.குடாநாட்டின் உண்மை நிலை தொடர்பாக அறிய பிரிட்டனை மையமாகக் கொண்ட இராணுவ கற்கைநெறி நிலையத்தைச் சேர்ந்த 21 இராணுவ உயரதிகாரிகள் கொண்ட குழுவினர், நேற்று இங்கு விஜயம் செய்தனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த இவர்கள் - யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்- புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 19 மாதங்கள் கடந்த நிலையிலும் வடக்கு - கிழக்கில் இயல்புநிலை உருவாகவில்லை. கடந்த கால யுத்தங்களால் 92 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றனர். அகதிமுகாம்களில் வாழும் இவர்களில் ஐந்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களுடைய குடும்பத்தினருக்கு 1200 ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களே வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 30 வீதமானோர் விவசாயிகளும் கடற்றொழிலாளிகளும் ஆவர். இயல்பு வாழ்க்கை மீளத்திரும்ப உயர்பாதுகாப்பு வலயம் தடையாக உள்ளது. இந்த உயர்பாதுகாப்பு வலயம் சட்டத்திற்கு முரணானது. எனவே இவற்றை அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டுமெனத் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்ந்து நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எல்லாரும் வந்து பாக்கினம். ஆனால், நிலைமை மாறின மாதிரித் தெரியேல்லை...!

EXPOAIR
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்

# பெண்களைப் புறக்கணித்து முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் தேசிய முழுமைபெறமாட்டாது

## அரசியற்துறை மகளிர் பிரிவு அறிக்கை

சமூகத்தில் இணைபிரியாத அங்கமான பெண்களைப் புறக்கணித்து விட்டு - முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் தேசிய முழுமையைப் பெறமுடியாது என்ற எமது தேசியத் தலைவரின் ஆழ்ந்த நோக்கானது, தமிழ்ப் பெண்களின் புரட்சிக்கு வழி சமைத்தது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறை மகளிர் பிரிவு- இரண்டாம் லெப்ரினன் மாலதியின் நினைவு நாளையும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இன்று தமிழீழப் பெண்களின் எழுச்சிநாள். தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றில் - முதன்முதலாக ஒரு பெண் புரட்சிக்கு வித்தான புனித நாள். இந்த நாளானது தமிழ் மக்கள் அனைவரும் அந்த வீரமகளின் இலட்சியத்தை தமக்குள் மீண்டும் பட்டை தீட்டிக்கொள்ளவும், இளைய தலைமுறையினரிடம் பதியமிட்டு வளர்க்கவும் பொருத்தமான எழுச்சி நாள்.

நீண்டகால அடிமை வாழ்வில் சிக்குண்டு போயிருந்த எமது சமூகத்திடம் - வாழ்வியலின் யதார்த்த நெறிமுறைகள் சிதைந்துபோனது. வெறுமனே இதுதான் வழமை என்று சொல்லப்படுகின்ற வழக்காறுகளும், சம்பிரதாயங்களும், சடங்குகளும், மூடநம்பிக்கைகளும், போலித்தன்மைகளும் மலிந்துபோய் - உண்மைக்கான தேடல் அற்றுப்போனது. வலுவிழந்து வழிதடுமாறிநின்ற தமிழ்ச் சமூகத்தின் இயங்கு நிலையில் - தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் புதிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. புது இரத்தம் பாய்ச்சியது. புதிய திசையில் வழிநடத்தியது.

உண்மையில் விடுதலை என்பது என்ன? அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து நிலத்தை மட்டும் மீட்டெடுப்பதா? இல்லை. அனைத்து விதமான அடிமைத்தனங்களிலிருந்தும், சாதி மத வேறுபாடுகளிலிருந்தும் , பெண் ஒடுக்குமுறைத்தனங்களிலிருந்தும், சமூக ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும் இனத்தை மீட்டெடுத்து சகல நிறைவோடும் நாட்டைக் கட்டியெழுப்புதல் என்ற விடுதலையின் அர்த்தம் ஆழமானது. அந்த அர்த்த பரிணாமத்தில் பார்க்கும்போது எமது விடுதலைப் போராட்டமானது ஆழமும், விரிவும் கொண்டதான மானுடத்தின் புரட்சியாக இன்று பூமிப்பந்தத்தில் பரிணமித்துள்ளது.

சமூகத்தில் இணைபிரியாத அங்கமான பெண்களைப் புறக்கணித்து விட்டு முன்னெடுக்கப்படும் எந்தப் போராட்டமும் தேசிய முழுமையைப் பெறமுடியாது என்ற எமது தேசியத் தலைவரின் ஆழ்ந்த நோக்கமானது, தமிழீழப் பெண்களின் புரட்சிக்கு வழிசமைத்தது.

பெண்மை பற்றிய சமூகத்தின் பார்வையும், புரிதலும் மாற்றம்பெற வேண்டுமாயின், அது எங்கே ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கேள்விக்கு நாளாந்த வாழ்வின் நடைமுறைகளிலிருந்தும், தேவைகளிலிருந்தும், வாழ்வதற்கான பிரசினைகளிலிருந்தும்தான் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற பதிலையே வரலாறு எமக்கு உணர்த்தியது.

உயிர் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளே தென்படாதபொழுது வரை விலக்கணங்களை மட்டுமே வைத்துக்கொண்டு - வெறும் கனவு காண்பது இருப்பையே தொலைத்துவிடும் நிலைக்கு இட்டுச்செல்லவும் கூடும். எனவேதான், வாழ்வின் நடைமுறைகளின் மூலமாகவே மாற்றத்திற்கான புதிய வாசல்களைத் திறக்கவும், பொருத்தமான புதிய தத்துவங்களை உருவாக்கவும் முடியும் என்பதை எமது போராட்ட வரலாறு கற்றுத்தந்தது.

சமூகத்தில் காலங்காலமாக நிலவிவந்த பெண்மைபற்றிய கருத்துருவாக்கங்கள்- விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பெண்களின் செயற்பாடுகளால் மாற்றம் கண்டன. தன்னம்பிக்கையும், தனித்த ஆளுமையும் பெண்ணின் இயல்பான விடயம் என்பதனை சமூகம் புரிந்துகொள்ளத் தொடங்கியது. போரின் வெற்றியே போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் காலகட்டத்தில் எம் இனம் நின்றபோது, சமூகவாழ்வியக்கமே போராட்ட சக்தியாகப் பரிணமித்த போது - பெண்களும் இயல்பாகப் போரில் பங்கேற்றனர். அணிகளைத் தலைமையேற்று நடத்தினர்.

விடுதலைப் போராட்டத்தில்- சமூக விடுதலை பற்றிய ஆழ்ந்த நோக்குக்கும் அப்பால், இன்றும் பெண்ணைப் பற்றிய பல புரிந்துகொள்ளாமைகளும், அவநம்பிக்கைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளே சமூகத்தில் சீர்செய்யப்படாத சிக்கல்களாகவும் மலிந்துபோய்க்கிடக்கின்றன.

சமூக மாற்றத்திற்கான முக்கிய களமாக விளங்குவது கல்விச்சாலைகள். எமக்கான கல்வியை நாமே தீர்மானிக்காதவரை, தென்னிலங்கையின் பரீட்சைத்தாள்களுக்கு எமது இளைய தலைமுறையை தயார்ப்படுத்தும் களமாக மட்டுமே எமது பாடசாலைகள் இருக்கமுடியும். எனவே, தமிழீழத்தின் தேசிய ஆன்மாவைக் கண்டறியும், கட்டியெழுப்பும் அறிவியல் கூடங்களாக இவை எப்படி மாறமுடியும்? ஒற்றை மரத்தின கீழும், ஓலைக் கொட்டகையின் கீழும், புழுதிக் கட்டாந்தரையிலும் மட்டுமல்ல கல்வியின் அவலம். எல்லாமே பற்றாக்குறையாகிவிட்ட பாடசாலை வாழ்வு எமது எதிர்கால சந்ததியை எத்தகைய மாற்றத்திற்கு இட்டுச்செல்லும். தேசத்தை நேசிக்கவும், தேசத்தின் வளங்களை ஆய்வு செயயவும், அதனை வளர்த்தெடுக்கவும் எல்லாவற்றுக்கும்மேலாக சமூகத்தின் பிற்போக்கு தழைகளை அண்டவிடாத புரட்சிக் கூடங்களாக புதிய மனோபாவத்தோடு, இளைய தலைமுறையை தேசத்தின் சிற்பிகளாக உருவாக்கும் இடமாக, தேசமே தொழுது போற்றும் புனிதமும் புரட்சியும் குடியிருக்கும் கோயிலாக எமது பாடசாலைகள் மாறினால் - சமூகத்தின் மனவுலகு நிச்சயம் மாறும். என்வே தேசம் எம்வசப்படும்போது எம் தேசியத் தலைவரின் சிந்தனையில் - தேசம் உயிர்பெறும் பொழுதுதான் அனைத்துப் பெண்களும் ஆளுமையையின் உச்சத்தை அடைவது சாத்தியமாகும்.

இன்று நிலவிவரும் சமாதானச் சூழல் காரணமாக, தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும் வாழ்கின்ற பெண்களின் பிரச்சினைகளை கண்டறிகின்ற சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இவ் ஆண்டில் கிராமம்தோறும், பிரதேசங்கள் தோறும், மாவட்டங்கள்தோறும் - நாம் சந்தித்த பெண்களின் ஆழ்மனவெளிப்பாடு என்பது இதுவரைகாலமும் புரிந்தும் புரியாமலும் அவர்களுக்குள்ளேயே புதையுண்டுபோயிருந்த உணர்வுகளின் வீச்சாக, மனங்களின் பிரளயமாக சங்கமித்தது. அவர்களுக்குள்ளேயே இருந்த ஆதங்கங்களும், ஆசைகளும், தேடல்களும், தீர்மானங்களும் சமூகத்தின் ஒட்டுமொத்தமான அபிலாஷையான - தேசத்தின் விடுதலையென்பதே அனைத்திலிருந்தும் விடுதலையைப் பெற்றுத்தரும் என்ற பிரகடனமாக அமைந்தது. உண்மையில் இதுவரை காலமும் நெஞ்சுக்குள் நெருப்பை எரித்துக்கொண்டு அடுப்போடுகிடந்த நெருப்புகள் ஒன்று கூடி, விடுதலைத் தீயெடுத்த பெருவிழாவாகத்தான் பெண்களின் சங்கம நிகழ்வுகளை எம்மால் இனம் காணமுடிந்தது.

தாயகத்துக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் பிரச்சினைகள் இன்னும் வித்தியாசமானவை. வழக்கமான தமிழ்ச் சமூகத்தின் மனோபாவத்திற்கும், அன்னிய நாட்டு சமூகத்தின் நடைமுறைகளுக்கும் இடையே சிக்கித் தவிக்கும் பெண்கள் அவர்கள். இருப்பினும் அவர்களின் தேசத்தின் மீதான நேசிப்பு, தேசவிடுதலைக்கான உழைப்பு உன்னதமானது. அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தமிழீழ தேசவிடுதலையின் வேரிலேயே தங்கியுள்ளது.

ஒட்டுமொத்தமாக சொல்லுவதானால், தமிழீழ பெண்கள் அனைவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சமபங்காளர்களாக இணைந்து செயற்படவேண்டியதன் தேவை தற்போது அனைவராலும் ஆழமாக உணரப்படுகின்றது. ஏனெனில், இந்த விடயமானது முக்கியமான இரண்டு கட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

தேசவிடுதலை என்பது பெண்களையும் இணைத்துக் கொள்ளும் போது தான் முழுமைபெறும். சமூக விடுதலையின் முக்கிய அம்சமான பெண்விடுதலை என்பது தேசத்தின் விடுதலையோடுதான் முழுமையாக சாத்தியமாகும். இதனையே எமது தேசியத் தலைவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சமத்துவத்தின் அடிப்படையில் ஓர் சமதர்ம சமுதாயத்தை கட்டியெழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண்கள் சமவுரிமை பெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்து விடுதலைபெற்று, ஆண்களுடன் சமதுவமாக கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக தமிழீழம் அமையவேண்டும் என்பதே எனது ஆவல்."

வரலாற்றின் முதல்வரியை எழுதிச் சென்ற இரண்டாம் லெப்ரினன் மாலதியின் இந்த மகத்துவம் வாய்ந்த நாளில் மிகுந்த தன்நம்பிக்கையோடும், கம்பீரத்தோடும் மாபெரும்- தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் தமிழீழத் தேசத்தின் பெண்கள் ஒரு முக்கியமான செய்தியை உலகிற்கு கூறிக்கொள்ள விரும்புகிறார்கள். "முன்னொரு காலம் அடங்கிக் கிடந்த பெண்ணினம் - தமிழீழத்தின் புதிய வரலாற்றின் போர்க்களங்களில் பகைவரை சுட்டெரித்த வீராவேசத்தோடும், தெளிந்த ஞானத்தோடும், சமூத்தின் தழைகளையும் சுட்டெரிக்க தயாராகிவிட்டனர். புரட்சிப்பெண்கள் யுத்தக்களங்களில் மட்டுமல்ல, சமூகத்தின் எல்லாத் தளங்களிலுமேயே வாழ்கிறார்கள், வளர்கிறார்கள். இன்னும் இன்னும் எந்த தீக்குளிப்புக்கும் தயாராகவிருக்கிறார்கள். எனவே, எம் இனத்தின் இத்தனை கால விலைகொடுப்புகளும் ஒரு நிரந்தர விடுதலையை எமக்கு பெற்றுத்தரவேண்டும். இல்லையேல் எமது வாழ்வு சிக்கலாகி, விடுதலை வீரியம் இழந்துபோய் விடும். இதற்கு நாமும் எமது தேசியத் தலைமையோ ஒரு காலமும் இடமளிக்கப்போவதில்லை. விடுதலையின் சுகத்தை புரட்சியின் மகிழ்ச்சியை நாம் இனங்கண்டு கொண்டோம். மீண்டும் ஒரு அவல வாழ்வும், அடிமையின் சுகமோ, எம்மை அண்டமுடியாது. எனவே, அனைவரும் இணைந்து நின்று தேசியத் தலைவரின் கரத்தை பலப்படுத்துவோம். தேசத்தின் விடுதலையில் இணைந்து நிற்கும் தமிழ் பெண்களாகிய நாம் சமூக விடுதலையிலும் இணைந்து முற்போக்காக நின்று, வாழ்வின் இலட்சியமாக வரித்துக் கொள்வோம் என, இந்த நாளில் உறுதியெடுத்துகொள்கின்றோம்.

எம்மோடு இணைந்து பணியாற்றும் அனைத்து பெண்கள் அமைப்பினருக்கும் இந்த நாளில் எமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன், தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் என்றும், தமிழீழப் பெண்களுக்கு பக்கபலமாக நின்று, அவர்களது எழுச்சிக்கு வலுச்சேர்த்து அனைவரும் இணைந்து தேச விடுதலைக்காய் உழைப்போம் எனக் கூறிக்கொள்வதில் அரசியற்துறை மகளிர் பிரிவு பெருமையும், பேருவகையும் அடைகின்றது. என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைஞ்சனாஸ் சங்கானை

பாலா, திபு நடித்த

அன்பு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

Tuhedo

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)

(சி-1619)

# இந்தியாவுடனான முதலாவது டெஸ்டில் நியூஸிலாந்து இக்கட்டான நிலையில்!

## ட்ராவிட் இரட்டைச் சதம்



இந்திய நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ரெஸ்ரின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின்போது இந்திய அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளதுடன், நியூஸிலாந்து இக்கட்டான நிலையில் உள்ளது.

நேற்றுக் காலை தமது ஆட்டத்தைத் தொடர்ந்த இந்தியஅணி வி.வி.எஸ்.லக்ஷ்மனின் விக்கெட்டை முதலில் இழந்தது. வி.வி.எஸ்.லக்ஷ்மன் 147 பந்துகளில் 64 ஓட்டங்களை எடுத்த நிலையில் - டானியல் விற்றோரியின் பந்து வீச்சில் வைஸ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களத்திற்கு வந்தவர் அணித் தலைவர் சௌரவ் கங்குலி இவர் தனது ஆட்டத்தினை மிகவும் மெதுவாகவே தொடங்கினார். பின்னர் இவரதும் ராவிட்டினதும் ஓட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கின. ராவிட் 28 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 222 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஜேக்கப் ஒரமின் பந்து வீச்சில் கீப்பர் காட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஐந்தாவது இணைப்பாட்டக்காரராக இணைந்த ராவிட்டும், கங்குலியும் 182 ஓட்டங்களை பெற்றனர். இது 1955/56 ஆம் ஆண்டுகளில் விஜய் மஞ்ச்ரேக்கரும், குலப்பராம் சான்டும் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்து பெற்ற 127 ஓட்டங்களை, முறியடித்தது.

ராகுல்ராவிட் ஆட்டமிழந்த பின்னர் களத்திற்கு வந்தவர் இந்திய அணியின் இளம் வயது விக்கெட் கீப்பரான பார்த்தீவ் பட்டேல். இவர் வந்த வேகத்திலேயே பவுண்டரிகளை விளாசித்தள்ளினார். 24 பந்துகளில் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களை மிக குறுகிய நேரத்திற்குள் பெற்றுக் கொண்டார். மறுமுனையில் அணித் தலைவர் சௌரவ் கங்குலி 211 பந்துகளில் எட்டு பவுண்டரிகள், மூன்று சிக்சர்கள் அடங்கலாக சதத்தைப் பெற்றுக் கொண்டார். இந்திய அணி 500 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டதாக அறிவித்தது.

நியூஸிலாந்து அணியினரின் பந்து வீச்சாளர்களை இந்திய அணியின் மட்டை வீச்சாளர்கள் விளாசித் தள்ளினார்கள் என்றே கூறவேண்டும்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களில் டரல்ரபி , ஜேக்கப் ஒரம், ஸ்ரைரஸ், ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும், டானியல் விற்றோரி இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடத் தொடங்கிய நியூஸிலாந்து அணி - சஹீர்கானின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் முக்கியமான மூன்று விக்கெட்டுக்களை இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான றிச்சட்ஸன் ஆறு ஓட்டங்களைப் பெற்றநிலையிலும் வின்சென்ற் - ஏழு ஓட்டங்களைப் பெற்றநிலையில் பார்த்தீவ் பட்டேலிடம் பிடிகொடுத்தும், அணித் தலைவர் பிளெமிங் ஒரு ஓட்டத்தை பெற்ற நிலையிலும் சஹீர்கானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

ஸ்ரைரஸ் 10 ஓட்டங்களுடனும், நதன் அஸ்ரில் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

## கண்ணிவெடிகள் அழிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் மீள்குடியமர்வதற்காக வீடுகளைகத் துப்பரவு செய்யும்போது - பெருமளவு வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு, நேற்று முன்தினம் ஹலோ ரெஸ்ட் நிறுவனத்தின் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அழிக்கப்பட்டது.

இதனால், நேற்று முன்தினம் கல்வயல் பகுதி வெடிச்சத்தங்களால் அதிர்ந்த வண்ணமிருந்தது.

கடந்த 2000 ஆம் ஆண்டு - இந்தப் பகுதியில் நடைபெற்ற யுத்தத்தின்போது படையினர் முகாமிட்டிருந்த வீடுகளிலேயே வெடிக்கும் நிலையில் இருந்த கிளைமோர் மற்றும் எறிகணைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. (34)

Jaffna College Institute of Technology & Institute of Agriculture
Vaddukoddai

Institute Day 2003

Will be held on Saturday the 11th October 2003 at 9.45 am in the Abels Auditorium

CHIEF GUESTS

Mr.V.Velupillai, B.Sc. & MIEE (London)
Provincial Development Engineer
Ceylon Electricity Board,
Jaffna.

&

Mrs. A.Velupillai
(B.Sc. Dip. in Education & M.Ed)
Principal Victoria College,
Chulipuram.

You are Cordially invited.

Director JCIT | Principal JCIA

(சி-1664)

# தற்போதைய அரசியல் நிலைமை குறித்து சொல்ஹெய்ம் - அகாஷி சந்தித்து பேச்சு!

## ஒஸ்லோவில் செவ்வாயன்று நடைபெற்றது



(ஒஸ்லோ)

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் - ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷியும், நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள், இடைக்கால நிர்வாகம் அமைத்ததன் பின்னர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக அறியமுடிகின்றது.

ஒஸ்லோவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பு தொடர்பாக, இலங்கையின் வெளியுறவு அமைச்சின் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்-



இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஜப்பானின் பங்களிப்புத் தொடர்பாக, இந்தியாவிற்கு விளக்கிக்கூறிய விடயங்களைத் தூதுவர் யசூசி அகாஷி - தூதுவர் எரிக சொல்ஹெய்முக்கு எடுத்துக் கூறினார்.

அதேவேளை, இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாகவும் யசூசி அகாஷி - எரிக் சொல்ஹெய்மிடம் விபரித்துக் கூறியிருக்கிறார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணதிற்கான நிதிப்பயன்பாடுகள் பற்றியும், விடுதலைப் புலிகளின் நேரடிக் கண்காணிப்பில் நிதியைப் பயன்படுத்துவது குறித்தும், அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டிருக்கிறது. யசூசி அகாஷியும், எரிக் சொல்ஹெய்மும் கடந்த மாதம் முற்பகுதியிலும் ஒஸ்லோவில் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் புயற்காற்றினால் மின்சாரம் தடைப்பட்டுள்ளது!

கடந்த 6 ஆம் திகதி மன்னாரில் வீசிய புயற்காற்றினால் மன்னார் - தலைமன்னார் வீதியின் தாராபுரப் பகுதியில் பல மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததினால், பல இடங்களுக்கு மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது.

ஏறத்தாழ இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் 24 மின்கம்பங்கள் சரிந்து விழுந்துள்ளமையால், பல மின் பாவனையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இதனைச் சீர்செய்ய இரண்டு நாட்கள் செல்லுமெனவும் பேசாலை, தலைமனனார், தாராபுரம், எருக்கலம்பிட்டி ஆகிய கிராமங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ்த் தொலைக்காட்சியின் மூலமாக தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிக்கலாம்!

பிரான்சிலிருந்து ஒளிபரப்பப்படும் தமிழ்த்தொலைக்காட்சியில்- தீபாவளி வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

புலமபெயர்ந்து கனடா, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளில் வாழும் இலங்கையைச் சேர்தவர்களுக்கு, அவர்களது உறவினர்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவிரும்பின், நாளை காலை 8.30 மணி தொடக்கம் 12 மணிவரையும், மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணிவரையும் - நல்லூர்ஆலய முன்றலில் நடைபெறும் ஒளிப்பதிவுகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

உங்கள் பதிவுகளை 021-222-3919 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது நேரில் மேற்கொள்ள முடியும் என, டிஜிற்றல் மீடியா நெற்வேக் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில்

# மாணவி - இளைஞர் தகாத உறவு; விடுதலைப் புலிகள் கண்டுபிடித்தனர்!

வவுனியாவில் கடந்த 6 ஆம் திகதி மாணவி ஒருவர் பாடசாலைச் சீருடையுடன், வாலிபர் ஒருவருடன் தகாத உறவு கொண்டிருந்தபோது, விடுதலைப் புலிகளினால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்த பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

பாடசாலை நேரம் இந்த மாணவி -வாலிபருடன் தகாத உறவில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை, விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டார். இதன்போது, அந்த வாலிபர் விடுதலைப் புலிகளிடம் இவர் என் காதலி என்றும், நீங்கள் எங்களைப் பிடிக்கமுடியாது எனவும் தெரிவித்தார். அதற்கு விடுதலைப் புலிகள் இந்த மாணவி உமது காதலியாக இருக்கலாம். ஆனால், பாடசாலை நேரத்தில் - பாடசாலைச் சீருடையுடன் இந்த மாணவி கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் நடந்துகொள்வதை எம்மால் அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்தனர்.

இதன்பின்னர், இவர்கள் இருவரையும் கடும் எச்சரிக்கை செய்து, விடுதலைப் புலிகள் விடுவித்தனர்.(03)

# திருமலை - ஆலங்குளத்தில் பதற்றம் நானூறு தமிழ்மக்கள் இடப்பெயர்வு!

(திருகோணமலை)

திருகோணமலையின் தெற்குப் புறமாக அமைந்துள்ள ஆலங்குளம் கிராமப்பகுதியில், 29 வயதுடைய செல்வராஜா லிங்கேஸ்வரன் என்ற தமிழ் இளைஞர் ஒருவரை- முஸ்லிம்கள் அடித்துப் படுகாயப்படுத்தியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வாலிபரைத் தாக்கிய முஸ்லிம்களில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தவேளை, அப்பகுதிக்கு விரைந்த பல முஸ்லிம்கள்- பொலிஸாரைத் தாக்கமுற்பட்டதால் எழுந்த களேபரத்தைத் தொடர்ந்து, அம்முஸ்லிம் சந்தேகநபரைப் பொலிஸார் விடுவித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆலங்குளம் பகுதியில் மீளக்குடியேறிவரும் தமிழ்மக்களை, அப்பகுதிக்கு வரவேண்டாமென முஸ்லிம்கள் அழுத்தங்கொடுத்து வருவதுடன், அப்பகுதியில் குடியேற முயற்சிக்கும் தமிழர்களுக்குப் பலவித தொல்லைகளையும் முஸ்லிம்கள் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று இரவு சில முஸ்லிம்கள்- பொல்லுகள், கத்திகள், சங்கிலிகள் சகிதம் அப்பகுதிக்குச் சென்று, அவ்வழியே சென்ற லிங்கேஸ்வரனைப் படுகாயப்படுத்தி, தமிழர்கள் அப்பகுதியிலிருந்து உடனே வெளியேறவேண்டுமென்று கோஷமெழுப்பியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மேலும் முஸ்லிம்கள் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சத்தில், ஆலங்குளக் கிராமத் தமிழ்மக்கள் 400 பேருக்கும் அதிகமானோர், அதையண்டிய ஈச்சன்தீவுப் பகுதிக்குப் பாதுகாப்புத்தேடி வந்துள்ளதாக, ஈச்சன்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

# பொதுமன்னிப்பு வழங்குமாறு கோரி தமிழ்க் கைதிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணையின்பின் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, தற்பொழுது சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் இளைஞர்கள் தமக்குப் பொது மன்னிப்பு வழங்கும்படி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் இது தொடர்பான கோரிக்கைகளை, சிறைச்சாலை ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்த விண்ணப்பங்கள் கம்பஹா மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்மூலம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது தொடர்பாக, சட்டமா அதிபர் திணைக்களம் கருத்துத் தெரிவிக்கையில் -

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டோரில் 38 பேர் மட்டுமே தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன. இவற்றில் கொழும்பு நகர மண்டபக் குண்டுவெடிப்பு, மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு, தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு போன்ற வழக்குகளும் அடங்கும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

# ஓமந்தையில் கைதான புலிகள்; வவுனியா நீதிமன்றால் விடுதலை

ஓமந்தைப் பகுதியில் வைத்து கடந்தமாதம் 14 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இரண்டு விடுதலைப் புலிகளும், நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டபோது, இவர்கள் இருவரையும், 10 ஆயிரம் ரூபா பணப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

எனினும், மாதத்தில் முதல் மற்றும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில், வவுனியா பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டுமெனவும் நீதிவான் பணித்திருந்தார்.

சந்தேகத்திற்கிடமான கைத்தொலைபேசி மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

# மன்னார் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சர் உறுதி!

(மன்னார்)

மன்னார் - வங்காலைப்பாட்டில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாகப் பாதிப்படைந்த மக்களுக்கு இழப்பீடு வழங்கப்படுமென அமைச்சர் ரவீந்திர சமரவீர உறுதியளித்தார்.

இந்தச் சம்பவத்தில் மீனவர்களின் 32 கொட்டில்களும், மீன்பிடி உபகரணங்களும் எரிந்து சாம்பராகியுள்ளன. மீனவர்கள் இது தொடர்பாக அமைச்சருக்கு எடுத்துக்கூறியதையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தீ விபத்து தொடர்பான விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு, மன்னார் அரசாங்க அதிபரை அமைச்சர் கோரியுள்ளார்.

## வெடிவிபத்தில் வீரச்சாவு

திருகோண௱லையில் கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில், போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக, விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

திருகோணமலை, தெஹிவத்த, புலிடியடிச்சேனை, தங்குவேலியைச் சேர்ந்த வீரவேங்கை செம்பருத்தி என்றழைக்கப்படும் சோமசுந்தரம் - ரகு என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

## மன்னாரில் ஆசிரியர் தினம்

மன்னாரில் உலக ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. புனித சவேரியார் தேசிய பெண்கள் பாடசாலையில் நடந்த இந்த நிகழ்வு -கல்லூரி அதிபர் ஜெயசீலியின் தலைமையில் நடைபெற்றது. மூத்த ஆசிரியர் குழாம் மற்றும் ஆசிரியர்களை, மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கௌரவித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களால் ஆசிரியர்கள் புகழ்பாடும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## தீபாவளி தினம் தேசிய விழா

தீபாவளி தினத்தை தேசிய வைபவமாகக் கொண்டாடுவதற்கு, இந்து கலாசார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்து கலாசார அமைப்பின் ஏற்பாட்டில், காலிமுகத்திடலில் இந்த வைபவத்தை நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் இந்த வைபவத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# உவர்மலை நேற்றுமுன்தினம் படையினரால் சுற்றிவளைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையின் உவர்மலைப்பகுதி நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 5 மணிக்கு ஆரம்பமான சுற்றிவளைப்பு 10 மணி வரை நீடித்துள்ளது. இதன்போது, நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். வீடுவீடாகச் சென்று வாக்காளர் பதிவட்டை, குடும்ப அங்கத்தவர் விபரங்கள், மேலதிகமாகத் தங்கியுள்ளோர் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புக்கான காரணம் எதுவும் தெரியவராதபோதும், எவரும் கைதுசெய்யப்படவில்லை. போர்நிறுத்தக் காலத்தில் முதன்முதலில் உவர்மலைப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





திருமலை குரங்குபாஞ்சான் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியாளர்களை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் 1996 ஆம் ஆண்டு இதே பகுதியில் வீரச்சாவடைந்த இரண்டு மாவீரர்களின் கல்லறைகளை செய்தியாளர்களுக்கு காட்டுவதை மேற்படத்திலும், செய்தியாளர்கள் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதியுடன் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மீது வழக்கு

## பிரதி அமைச்சர் பந்துல தாக்கல்

கட்டுரை ஒன்றை வெளியிட்டு, தனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியதற்காக -லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மீது பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி, வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது - 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி வெளியான, தினமின நாளிதழின் 4 ஆம் பக்கத்தில் - டேவிட் சித்ரசேன என்பவரால் கட்டுரை ஒன்று எழுதப் பட்டிருந்தது.

இந்தக் கட்டுரை - தனது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்ததாகத் தெரிவித்தே, பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி, கொழும்பு மாவட்டநீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அரசியல்வாதி, நாடாளுமன்ற உறுப்பினர், திரைப்படத்தயாரிப்பாளர் மற்றும் விரிவுரையாளர் என்ற அடிப்படையில் - தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டே, பந்துல குணவர்த்தன இந்த மானநஷ்ட வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

# கட்டாக்காலி நாய்களால் பொதுமக்கள் அசௌகரியம்

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவு கடற்படை முகாமைச் சூழவுள்ள பிரதேசங்களில் காணப்படுகின்ற கட்டாக்காலி நாய்களால், இப்பிரதேச மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அறியமுடிகின்றது.

இந்த முகாமூடாகவே பிரதான போக்குவரத்துப்பாதை காணப் படுவதனால், இவை பயணிக்கும் பயணிகளைக் குரைத்துப் பயமுறுத்துவதுடன், சிலரைக் கடித்துக் குதறியுமுள்ளன. இதனால், பயணிகள் பயப்பீதியுடனே சென்று வருவதனைக் காணமுடிகின்றது.

மேலும், இங்குள்ள கால்நடைகளை இந்நாய்கள் கடித்துக்காயப் படுத்துவதுடன், கொன்றும் உண வாக்கிக் கொள்கின்றன.

இப்பிரதேசத்தில் ஏறத்தாழ இருபது கட்டாக்காலி நாய்கள் காணப் படுகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(83)

## தீவக வலயத்தில்

# நிலையறி பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலை மட்டத்தில் பகுப்பாய்வு

(புன்னாலைக்கட்டுவன்)

தீவக வலய பாடசாலைகளில் தரம் 3 மாணவர்களுக்கு நடாத்தப் பட்ட நிலையறி பரீட்சையில், விடைத்தாள்கள் குறிப்பிட்ட வகுப் பாசிரியரால் திருத்தம் செய்யப்பட்டு, பாடசாலை மட்டத்தில் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் நடத்தப்பட்ட இந்தக் கணிப்பீட்டுப் பரீட்சைப் பெறுபேறுகள், பாடசாலை மட்டத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப் பாளர் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப் பட்ட இந்தப் பரீட்சை, புதிய கல்விச் சீர்திருத்தத்தின் வினைத்திறனை ஆய்வுசெய்யும் பொருட்டே நடத் தப்பட்டதாகும்.

மேலும், இந்தப் பெறுபேறுகள்- பாடசாலை, கோட்ட, வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலே பகுப் பாய்வு செய்யப்பட்டு, ஆய்வுக் குட்படுத்தப்படவுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். (83)

# படையினர் புதைத்த கண்ணிவெடியால் இயக்கச்சியில் புல்டோசர் சிக்கியது

ஆனையிறவு இயக்கச்சிப் பகுதியில் கடந்தகால யுத்தநடவடிக்கையின்போது, இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியொன்று நேற்றையதினம் வெடித்துள்ளது.

இந்தப் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த புல்டோசர் ஒன்றே இந்தக் கண்ணிவெடி விபத்திற்கு இலக்காகியது. எனினும், எவருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் இன்னமும் அந்தப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றவில்லை. அந்தப் பகுதியில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள வேண்டாமென கூறப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.





அண்மையில் நடைபெற்ற கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழாவின் - நற்கருணைப் பவனியையும், அன்னையின் திருச்சொரூபப் பவனியையும், இதில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

## வகுப்பறைகள் புனரமைப்பு

எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின், முதன்மைநிலை வகுப்பறைகள் - யுனிசெப் நிறுவன நிதி யுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

'பிள்ளை நேயப்பாடசாலை' செயற்திட்டத்தின் மூலம், புதிய கல்விச் சீர்திருத்தக் கல்விச்செயற்பாடுகளுக்கு ஏற்ப, இவை புனரமைக்கப் பட்டு வருவதுடன், வகுப்பறைகளின் உள்ளும், புறமும் - சிறுவர் சித்திரங்கள், கதைச்சித்திரங்கள் வரையப்பட்டுவருகின்றன.

மேலும், இங்கு இந்தச் செயற்திட்டத்தின்மூலம் நீர்தாங்கி ஒன்றும், சிறுவர் விளையாட்டு முற்றமும் அமைக்கப்படவுள்ளன.

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட நெருஞ்சிமுனை றோ.க.வித்தியாலயம், மண்டைதீவு றோ.க.வித்தியாலயம் உள்ளிட்ட ஐந்து பாடசாலைகளில், பிள்ளைநேய பாடசாலை செயற திட்டத்தின்மூலம், புனரமைக்கப் படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.(83)

## நன்நீர் நிலைகள் உவர்நீராக மாறும் அபாயம்

(புன்னாலைக்கட்டுவன்)

எழுவைதீவுப் பிரதேசத்திலுள்ள பாவனைக்குகந்த நன்நீர்நிலைகள்- அண்மைக்காலமாக உவர்நீர்நிலைகளாக மாறிவரும்நிலை காணப்படுகின்றது.

நான்கு புறமும் ஆழ்கடலால் சூழப்பட்ட இத்தீவில், பாவனைக்குகந்த நீர்நிலைகள் ஒரு சிலவே காணப்படுகின்றன.

அவற்றில் சில உவர்நீர்நிலைகளாக மாற்றமடைவதனால், ஏனைய நன்நீர் நிலைகளும் - உவர்நீர் நிலைகளாக மாற்றமடையுமோ என்று இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் நீர்நிலைகள் மாற்றமடைந்துள்ளமையால், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் நீண்ட தூரம் சென்று, குடிநீர் எடுத்து வருவதனைக் காணமுடிகின்றது. (83)

## தலைமைத்திறன் செயலமர்வு

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, தலைமைத்திறன் விருத்தி தொடர்பான ஆசிரிய நிலைய செயலமர்வு நாளை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை இடம் பெறவுள்ளது. (83)

# வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : பி.பிரபானுசன்
முகவரி : தொண்டமனாறு.

### இரண்டாவது அகவையில்



பெயர் : செ.கம்சலா
முகவரி : விஸ்வகுல வீதி, பருத்தித்துறை.

### நான்காவது அகவையில்



பெயர் : சி.சிவாரூசன்
முகவரி : நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

### ஐந்தாவது அகவையில்



பெயர் :க.கலாபன்
முகவரி : கல்வயல், சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------------------

முகவரி :---------------------------------------------

பிறந்த ஆண்டு:---------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

# இசைக்கருவி இல்லாமல் இனிமையான இசையைக் கேட்க முடியாது



இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி. பாக்கியலெட்சுமி நடராசா - இவர் கர்நாடக இசையில், வயலின் வகிக்கும் பங்குபற்றிய ஆய்வின்மூலம், முதுதத்துவமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள முதிர்ந்த இசைக் கலைஞர்களில் ஒருவர். இவர் வயலின் இசைப்பதில் தனக்கென ஒரு தனிப் பாணியைக் கொண்டுள்ளார். இவருடனான ஓர் சந்திப்பு.....



பருத்தித்துறை வீதியால் நாம் பயணத்தை மேற்கொண்ட போது. நண்பகல் வெயிலில அம்மன் வீதியில் ஆசிரியையின் வட்டை அண்மிக்கும்போதே, பல மாணவிகள் வயலினுடன் வருவதைக் கண்டு கொண்டு, ஆசிரியையின் வீட்டிற்கு 12 மணியளவில் செல்கி றோம். எம்மை இனங்கண்டு வரவேற்கிறார். சுருக்கமான எமது அறிமுகத்துடன், எமது நோக்கத்தை வெளிப்படுத்தினோம். அவர் இசைத்துறை சார்பாகவும், அதில் வயலின்



இசைக் கருவியின் பங்களிப்பு பற்றியும் மிகநிதானமாகத் தனது கருத்துப் பரிமாற்றங்களை ஆரம்பித்தார்.

எனது இசைத்துறை பிரவேசம் 14 வயதில், வயலினுடன் ஆரம்பமாகியது. இதற்கு எனது சகோதரனின் பங்கு மிக முக்கியமானது. எனக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது என்றால் - இசை விழாக்கள், இசைக் கச்சேரிகளை நிறையப் பார்ப்பதுண்டு. இவற்றிலும், இந்த இசை வேள்விகளில் வயலின் எவ்வாறு தனது பங்களிப்பைச் செய்கிறது, இதன் முக்கியத்துவம் என்ன என்பதைப் பற்றி அறிவதுடன், வயலினிலேயே எனது முழுக்கவனம் திசை திரும்பியது. இதன் பயனாக எதிர்காலத்தில் நானும் இப்படி வயலின் இசைப் பதில் முன்நிலையில் வர வேண்டும் என்ற ஆதங்கம் என்னைத் தொற்றிக்கொண்டது.

இதனால், நான் யாழ்ப்பாணத்தில் சர்வேஸ்வரசர்மாவிடமும், இந்தியாவிலே ரி.என் கிருஸ்ணன், என். எஸ். அனந்தராமன் போன்றோரிடம் முறையாக வயலின் கற்றேன். எனது பாணி பரூர் பாணியாகவே உள்ளது. இன்றுவரை குருவின் ஆசி எனக்குண்டு என்று சொல்வதில் பெருமையடைகிறேன். நான் இறுதியாக 1998 ஆம் ஆண்டில் இந்தியா சென்றேன். அப்போதும் சரி, எப்பவும் சரி நான் - இந்தியா சென்றால், எனது குரு எனக்கு பிரத்தியேகமான வயலின் வகுப்பு எடுப்பதை நான் இந்த இடத்தில் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

கலை உலகிலே ஒவ்வொருவரும் தங்களுக்கு எனத் தனியான இடத்தை வகிப்பார்கள். நீங்கள் இதனை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள் என வினவியபோது - நான் எனது தனி நிகழ்ச்சிகள் என்றாலும், ஏனையோரது குழுநிகழ்ச்சி என்றாலும், பெருவிருப்போடு முழுமையாக என்னை அர்ப்பணித்து, வயலினில் முழுப்பங்கையும் வழங்குவேன்.

தனிக்கச்சேரி, மிருதங்க அரங்கேற்றம், நடன அரங்கேற்றம், வாய்ப்பாட்டுக் கலைஞருக்கென அணிசெய் கலைஞர்களில் ஒருவராகப் பல முதிர்ந்த, மூத்த கலைஞர்களுடனும், இன்றைய இளம் கலைஞர்களுடனும் எனது வயலின் பெரும் பங்காற்றியது, ஆற்றிவருகிறது.

இன்று தோற்கருவிகள், துணைக் கருவிகள், நரம்பு கருவிகள் - கர்நாடக இசையில் பெரும் பங்காற்றி வருகிறன. இதில் வயலினின் பங்கு முக்கியமானது. இதன்மூலம் சோகமான உணர்வையோ அல்லது சந்தோஷமான உணர்வையோ மிகத் தெளிவாக உணரலாம்.

இது ஓர் மேல் நாட்டு வாத்தியக் கருவியாக இருந்தாலும், இந்த இசைக் கருவி இல்லாமல் ஓர் இனிமையான இசையைக் கேட்கமுடியாது.

வயலின் - தனிக் கச்சேரியையும், வாய்ப்பாட்டு இசைக்கு பக்க வாத்தியமாகவும், வேறு இசைக் கருவிகளுக்குப் பக்கவாத்தியமாகவும் உள்ளது.

இந்த இசைக் கருவிகளின் இன்றையநிலை எவ்வாறு என நாம் வினவியபோது - கர்நாடக இசைக் கருவிகளில் மேலைத்தேய இசைக் கருவிகளின் ஆதிக்கம் உண்டு. இவை இவற்றுடன் இணைவதனால், பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. மேலைத்தேய இசைக் கருவிகளைத் தனியாகவும், கர்நாடக இசையிலும் வாசிக்கிறார்கள். இவற்றின் அறிமுகத்தினால், இசை நல்லமுறையில் வளர்ந்து செல்கிறது.

உங்களது 30 வருட இசை உலக வாழ்க்கையில் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா எனக் கேட்டபோது, அதற்கு அவர்- முன்புபோல் இசை மன்றங்கள் இன்று இல்லை. அவை இசையை வளர்ப்பதற்குப் பெரும் பங்காற்றியமை குறிப்பிடப்படவேண்டியவை. ஒரு நிகழ்ச்சியில் நாம் பங்குகொள்ளும்போது, நாம் பக்கவாத்தியமாக இருந்தாலும், அந்த எண்ணம் எம்மில் இருக்கக்கூடாது.

தனிக்கச்சேரிகளில் எமது சொந்தக் கற்பனைகளை மிகத்திறமையாக வெளிப்படுத்தலாம். இதில் எமது தனிப்பாணியை வெளிக் கொண்டுவரலாம். பக்க வாத்தியமாயின் - வாய்ப்பாட்டுக் கலைஞரின் இசைவுக்கு ஏற்ப எமது இசைவைக் கொண்டுவரவேண்டும். இந்தப் பணிவு பொதுவாக எல்லா வயலின் கலைஞர்களுக்கும் இருக்கவேண்டும் என மிகத்தெளிவாகவும், அதேநேரம் சற்று இறுக்கமாகவும் தெரிவித்தார்.

மாணவர்களைப் பற்றி நீங்கள் எனன கூறவிரும்புகிறீர்கள் எனக் கேட்ட போது - கேள்வியின் முன்பே சிறிய புன்முறுவலை உதிர்த்த வண்ணம், பதிலுக்கு வருகிறார். இன்றைய மாணவர்கள் கலையைக் கற்றாலும் கலையில் எவ்வளவோ கற்பதறகு இருக்கிறது. அதை உணர்ந்து கற்றுச் செயற்படுபவர்கள் ஒரு சிலராகவே உள்ளனர்.

கலையின் ஆழம் அறிந்து, கலையில் எவ்வளவு நேரம் செலவிட்டு அதை உள்வாங்கவேண்டும் என்ற சிந்தனையுள்ள மாணவர்கள் வளர வேண்டும். இன்றைய மாணவர்களுக்கு - குருபக்தி குறைவாகவேயுள்ளது. இசையைப் பொறுத்தவரை - குருபக்தி மிகமிக முக்கியமானது. கலையைக் கலைக்காக, கலையின் தன்மையறிந்து பயிலும் மாணவர்கள் முன் வரவேண்டும் எனப் பல கருத்துக்களை முன் வைத்தார்.

இன்றைய நுண்கலைகள் - தொழில்நிலைக் கல்வியாகவே உள்ளது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்றபோது - மிகமிக முக்கியமான கேள்வி. சில மாணவர்கள் இசையை உண்மையாகவே விரும்பி, அதை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் கற்கிறார்கள். எனது அனுபவத்தில் ஒரு சிலரே இக்கலைக்குத் தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்றார்கள். ஏனையோர் தமது பெயரின் பின், ஒரிரு எழுத்துக்களில் பட்டம் பெற்று - அதன்மூலம் வேலை. சமூகத்தில் தானுண்டு, தன் வேலை உண்டு என்றநிலையில் உள்ளனர்.

இதனால், அவர்களும் மேலே வளராமல், கலையையும் வளர்க்காமல் உள்ளனர். இந்தநிலை மாற வேண்டும். எனது மாணவர்களில் ஒரு சிலர் கலைக்காகத் தங்களை அரப்பணித்து - உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செயற்படுகின்றனர் எனத் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஆசிரியையிடம்,

இசை உலகில் உள்ளவர்களுக்கும், உள்நுழைய இருப்பவர்களுக்கும் - நீங்கள் கூற விரும்புவது என்ன என வினவியபோது- இளம் சமுதாயம் - சாஸ்திர முறைப்படி இசையைக் கற்று வளர வேண்டும். கர்நாடக இசை இந்த நாட்டில் வளர்க்கப்படவேண்டும். அதேநேரம் நல்ல கலைஞர்களும் வளரவேண்டும். அவர்களும் தூய்மையான இசையை வளர்க்க வேண்டும். முதிர்ந்த கலைஞர்களை மதித்து, அதேநேரம் அவர்களிற்குரிய உதவிகளை உரியவர்கள், உரியமுறையில் வழங்க வேண்டும். குருபக்தியுடன் செயற்படக்கூடிய, இளங் கலைஞர்கள் நிறையத் தோன்றவேண்டும். இவர்கள் தனியே இசையில் மட்டும் வளராது, கல்வியிலும் சிறப்புப் பெற்று இந்த நாட்டிற்கும், ஏனைய நாடுகளிற்கும் சென்று, நாட்டிற்கும் தமக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

இசைத்துறை சார்பான உயர் கல்வியை வழங்கிவரும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் பணி போற்றுதற்குரியதாகும். இதன் மூலம், மாணவர்கள் பட்டதாரியாக வெளிவருகிறார்கள்.

இவர்கள் இசையில் மேல் நிலைக் கல்வியைத் தொடர வேண்டும். இதன்மூலம் சிறந்த இசைக் கலைஞர்கள் எமது நாட்டிற்கும், எமது கலைக்கும் பொருத்தமானவர்களாக முன் வரவேண்டும் எனத் தனது கருத்துக்கள் மூலம், இசைத்துறையில் தனக்கு இருக்கும் பற்றுறுதியையும், நெருக்கமான ஈடுபாட்டையும் வெளிக்காட்டும் ஆசிரியையிடம்,

எமது பத்திரிகை சார்பாக நன்றிகூறி, நாம் எண்ணி வந்த கருமங்கள் நிறைவேறிய மனத் திருப்தியுடன், ஆசிரியையிடம் இருந்து விடைபெற்று, எமது அலுவலகம் நோக்கிப் பயணத்தை மேற்கொண்டோம்.

காவலூர் - விஜேந்திரன்

# தன்னம்பிக்கை என்பது பெண்களின் பக்கபலம்

தன்னம்பிக்கை எல்லாவற்றிற்கும் ஒரு மூலதனம். ஒரு செயலைச் சரியாக அணுகுவதும், செய்வதும், ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்வதும், சூழ்நிலையைச் சரியாக சமாளிப்பதும் தன்னம்பிக்கையை வளர்க்கும். தன்னம்பிக்கையைப் புரிந்து கொள்ளும் திறனை வளர்த்துக்கொள்வதற்கும், சில குணங்களைத் தவிர்ப்பதற்குமான சில வழிமுறைகள்...



ஒருவரை முதல் தடவை பார்க்கும் போது, அவரின் இறுக்கமான முகத்தை வைத்து அவர் சிடுமூஞ்சி என்றோ, முறுக்கு மீசையைப் பார்த்து கோபக்காரர் என்றோ, எண்ணெய் வழியும் முகத்தைக் கண்டு சோம்பேறிதான் என்றோ முடிவு செய்யாதீர்கள். தோற்றத்தை வைத்து ஒருவரின் குணத்தை ஊகித்துக் கண்டு பிடிக்கமுடியாது.

எவர் சொல்வதையும் கவனமாகக் கேளுங்கள். காது கொடுத்து கேட்பது பல தகவல்களை, விடயங்களை கற்றுத்தரும். பேசுபவர் எப்படிப்பட்டவர் என்பதையும் புரிந்துகொள்ள உதவும்.

ஒருவரைப் பார்த்து, அவர் சரியான மோசமான ஆள் என்பதை அன்றைக்கே தெரிந்துவிட்டது என்று புத்திசாலியாகப் பேசுகிறவர்கள் நம்மில் அதிகம். ஒரு விடயத்தை வைத்து யாரையும் முழுமையாக தெரிந்துகொள்ள முடியாது. அதனால், முதல் தடவை சந்திப்பில் அதிகம் பேசுவதை தவிர்க்கவும். நம்மைப்போலவே மற்றவர்களும் வெவ்வேறு சூழ்நிலைகளில், வெவ்வேறு விதமாக நடந்துகொள்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீ இப்படி நடந்து கொள்வாய் என நினைத்துக் கூடப் பார்க்கவேயில்லை என்று உணர்ச்சிவசப்படுவதைவிட அவருடைய குணங்களில் ஒன்று அது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எந்த விடயத்தையும் அறிவுபூர்வமாக மட்டுமே கையாளவேண்டும். உள்ளுணர்வுகளின் அடிப்படையில் கையாள்வதோ, உணர்ச்சிவசப்பட்ட நிலையில் முடிவுக்கு வருவதோ ஒருபோதும் சரியான தீர்வைத் தராது.

எல்லோருக்குமே நல்ல, கெட்ட குணங்கள் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஒருவரிடம் நல்ல குணங்களை மட்டுமே எதிர் பார்ப்பது தவறு. நல்ல விடயங்களை பாராட்டுவது, கூடாத குணங்களை தவிர்ப்பதும் உங்களைச் சிறந்த பெண்ணாக மாற்றும். பிறர் சொல்ல வரும் கருத்தை முழுமையாகக் கேட்டபின், உங்கள் கருத்தை நிதானமாகக் கூறுங்கள். இவ்வாறான விடயங்களைப் பின்பற்றும்போது, ஒரு பெண்ணானவள் தன்னம்பிக்கையுள்ள சிறந்த பெண்மணியாகத் திகழமுடியும்.

# தாய்ப்பால் முதல் அழுகை முதலுதவி வரை

இந்த உலகில் பிறந்த அடுத்த சில நிமிடங்களிலேயே நாம் செய்யும் முதல் காரியம் அழுவதுதான். இந்த உலகில் தோன்றிவிட்ட சோகம் அதற்குக் காரணம் அல்ல. அந்தக் குழந்தைக்குள் இருககும் இரண்டு சிறிய நுரையீரல்களும் வேலை செய்யத் தொடங்குவதற்கான ஒரு பயிற்சிதான் அந்த அழுகை. பெரும்பாலும் பிறந்து ஆறு வாரத்துக்குள் குழந்தையின் அழுகை ஒரு எல்லைக்குள் வந்துவிடுகின்றது. அதற்குப் பிறகும் குழந்தை தொடர்ந்து அழுகிறது என்றால், கீழ்க்கண்ட விடயங்களில் கவனம் செலுத்துவது நல்லது.

★ குழந்தை சிறுநீர் கழித்துவிட்டால், அதன் உடையகளும், உடலும் நனைந்து விட்டதா? இதறகு அழுகை காரணம் என்றால் - உடையை மாற்றவேண்டும்.

★ குழந்தை பசியாக இருந்தால் அது அழுவதற்கு வாய்ப்புண்டு - தாய்ப்பால் கொடுக்கவேண்டும்.



★ எதையாவது பார்த்துப் பயந்தாலும் அழுகை வரலாம் - குழந்தையைக் கையில் எடுத்துச் சமாதானப் படுத்தினாலே போதுமானது பிரச்சினை தீர்ந்துவிடும்.

★ சில நேரத்தில் ஏதாவது பூச்சியோ, கூர்மையான பொருளோ குழந்தையின் உடலைக் குத்திக்கொண்டிருக்கின்றதா என்பதைக் கூர்மையாகக் கவனியுங்கள்.

★ வயிற்றில் வலியோ அல்லது வாயுவோ இருந்தாலும், குழந்தை அழலாம் - அவ்வாறாயின், குழந்தையின் வயிற்றை மெதுவாகத் தடவிவிடுங்கள். பின் தோளில் தூக்கிப்போட்டுக்கொண்டு, முதுகைத் தடவியபடி கொஞ்சநேரம் நடந்துபாருங்கள். தாயின் உடலில் இனிப்பான பண்டங்கள், வெங்காயம், பூண்டு ஆகியவை அதிகளவில் சேர்ந்தாலும், வயிற்றில் இப்படியான சங்கடம் ஏற்பட்டு, குழந்தை அழலாம்.

★ காய்ச்சல் காரணமாகக் குழந்தை அழுதால், என்ன செய்வதென யோசிக்கின்றீர்களா? - மாத்திரைகளைத் தூளாக்கிக் கொடுக்கவேண்டாம். மாத்திரைகளுக்குப் பதிலாகச் சொட்டு மருந்துகள் விற்கப்படுகின்றன. அவற்றை வாங்கிக் கொடுக்கலாம்.

ஒருமுறை சொட்டு மருந்தைக் கொடுத்தால், அதற்கு ஆறு மணி நேரத்திற்குப் பிறகு தான் மீண்டும் அளிக்கப்பட வேண்டும். ஒருமுறை இவ்வாறு கொடுத்தும் நிற்கவில்லையாயின், மருத்துவரை நாடவேண்டும்.

★ எப்படியிருந்தாலும், குழந்தை தொடர்ந்து அழுது கொண்டிருந்தால், மருத்துவரிடம் செல்லவேண்டும்.

# அன்னையின் அரவணைப்பில்

இன்று சில பெண்கள் தமது பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு வைப்பார்கள். வீட்டில்



இருக்கும் தாயிடம் கூறமாட்டார்கள்.

தில்தானே வந்திருக்கும். அனுப வநதான் சிறந்த ஆசான். எனவே, தனது மகளின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து வைப்பார்கள்.

ஒரு பிள்ளையின் வாழ்க்கை

ருடனும் அன்பாகவும், பண்பாகவும், ஒழுக்கமாகவும், பொறுமையுட னும், வாழ்க்கை நடத்துகின் றாள். என்றாலும், அதற்கு எதிர் மாறர்கவும் இருக்கின்றனர். அதற்கு அவர்கள் காரணம் காட்டுவது -

'தாயின் வளர்பபு' முறையைத் தானே அன்றி, வேறில்லையே! அந்தளவு ஒரு தாயினதும் மகளினதும் உறவு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது என்ற பொதுவான அபிப்பிராயமும் உண்டு.

பெண்பிள்ளைக்கு தன் தந்தையிடம் தான் ஒட்டுதல் அதிகமாக இருக்கும். ஆனால், அது ஒரு குறிப்பிட்ட வயது வரையில்தான்.

ஒரு காதல் விசயத்தை மகள்- தன் தாயிடம்தான் கூறத்தொடங்குவாள். ஒரு தாயால்தான் ஒரு மகளினுடைய உணர்வுகளைச் செவி மடுக்கமுடியும், அமைதியாகக் கேட்கவும் முடியும்.

# உயர்ச்சி பெறும் பிள்ளை

அம்மாவிற்கு என்ன தெரியும்? சமைப்பது மட்டும்தான் தெரியும். அவர்தான் படிக்கவில்லையே என்று நினைக்கின்றனர். ஏட்டுப்படிப்பு குறைவாக இருந்தாலும், அவர்களிடமுள்ள அனுபவம் பெரிதல்லவா? ஏனென்றால், அவர்களும் மகள் என்ற வாழ்க்கைக் கட்டத்தைத் தாண்டித்தானே வந்திருப்பார்கள். பெணணுக்குப் பிரச்சினை - காலம் மாறினாலும் ஒரேரூபத்

ஒரு தாயின் கையில்தான் தங்கி இருக்கின்றது.

ஒரு பெண்ணுக்கு இரண்டு உலகம் என்பது நிஜமே! பிறந்த வீட்டில் ஒரு வாழ்க்கை, பெற்றவள் மட்டுமல்ல, புகுந்த வீட்டில் இருப்பவளும் ஒரு தாய்தானே. பிறந்த வீட்டில் ஒரு பெண்ணுக்கும் தாய்க்கும் சுமுகமான உறவு இல்லாவிட்டால், அவளுடைய புகுந்த வீட்டில் மாமியாருளுடன் ஒத்துப்போவாளா?

புகுந்த வீட்டில் அவள் எல்லோ

எனவே, எவ்வளவுதான் சூழ்நிலைகள் மாறினாலும் தன் தாயிடம் உள்ள நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால், ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணால்தான் புரிந்து கொள்ள முடியும் என்பதைத் தவிர வேறு காரணம் இருக்கமுடியுமா.

ஒரு பெண்ணுக்கு பெருமை தன் தாயால் ஏற்படவேண்டும். ஒரு தாய்க்கு பெருமை தன் பெண்ணால் ஏற்படவேண்டும்.

# வெற்றியைத் தக்கவைக்க - சில குறிப்புகள்

நான் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். எனக்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என, பல



அப்படித்தான் இதுவும், அவற்றைக் கற்றவர்களுக்கு தோல் வியே இல்லை.

விடாமுயற்சி இருந்தால் தனியாகவே வெற்றிபெறமுடியும். இலட்சியம் நிறைவேறும்வரை நேரத்தை வீணாக்குவதில்லை என்று முடி வெடுங்கள். வீணான தேவையற்ற விடயங்களைக் கதைப்பதை நிறுத்துங்கள், தோல்விக்கான முதற்படி தேவையற்ற விதத்தில் வம்பளப்பது.

தனக்கொரு வாய்ப்பு நழுவிப் போனாலும், பரவாயிலலை. மற்ற வர்களுக்குக் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக - 'எனக்கு கிடைக்கவில்லை, அவளுக்கு எப்படிக் கிடைக கும் என்று பார்க்கிறேன் என்று சூளுரைப்பார்கள். ஒரே இடத்திலிருந்து கொண்டே உறவு, நட்புப் பாராமல் தவறான தகவல்களைப் பரப்புவார்கள். அழிவுக்காக உழைப்பவர்கள், ஆக்கபூர்வமாக எதையும் சாதிக்கமுடியாது. எனவே, அவர்களை அலட்சியப் படுத்துங்கள்.

பெண்களின் கேள்வி இதுதான். வெற்றிக்கு இதுதான் வழிமுறை என்று யாரும் சொல்லமுடியாது. வெற்றி பெற்றவர்கள், சாதித்தவர்கள், தமக்கென்று ஒரு உத்தியை வைத்திருப்பவர்கள். ஆனால், அவர்கள் கடந்துவந்த பாதை ஒரேமாதிரியானதாகும்.

உழைப்பு, முயற்சி, தன்னம்பிக்கை இருந்தால் வெற்றி நிச்சயம் என்று எமக்குத் தெரியும். ஆனால், இந்த மூன்றையும் தவிர, வேறு சில குணங்கள் அந்த வெற்றியைத் தக்கவைக்க உதவுகிறது.

படகில் செல்லும்போது, புயல் அடித்தால், நீந்திக் கரையேறத் தேவையான சூட்சுமங்களை நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

நாம் - எமது வெற்றிக்கு உ[illegible]த்தால் போதுமானது. மற்றவர்களின் தோல்வி - அவர்களின் செயலால், குணத்தால் தானாகவே வந்துசேரும். நல்லது நினைத்தால், நல்லது நடக்கும்.

ஆனால், அது மட்டும் போதுமா? படிப்பில், விளையாட்டில் பதக்கங்களை வெல்வது, நல்லமுறையில் ஒரு குடும்பத்தை நடத்திச் செல்வது, அலுவலகத்தில் முன்னேறுவது, தொழிலில் வளர்ச்சியடைவது..... இப்படி உங்கள் வெற்றியின் குறிக்கோள் எதில் வேண்டுமானாலும் இருக்கலாம். எப்பாடுபட்டாவது

அந்த உயரத்தை நீங்கள் அடைந்துவிடலாம். ஆனால், உங்களுக்கான சவால் அந்த இடத்தைத் தக்கவைத்துக்கொள்வது.

நீங்கள் ஏணியில் ஏறும்போது, உங்கள் கால்களை இழுத்துவிடவும், கதிரையை எட்டுகின்ற சமயம் அதைத் தட்டிவிடவும், எத்தனையோ கைகள் பரபரக்கும். அதற்காக நீங்கள் கலங்கக்கூடாது.

எடுத்தகாரியத்தை யாருக்காகவும், எதற்காகவும் கீழே போடாதீர்கள்.

பாதையில் இருக்கும் மைல்க்கல், அபாய எச்சரிப்புகள், கிலோ மீற்றர் குறிப்புகளுடன் வெற்றிப் பாதை விரிந்திருக்கும்..... திடீரென ஒரே மூச்சில் அடைந்துவிடலாம் என்று நீங்கள் நினைத்தால், அது தவறு.

காட்டுக்குள் சருகுகளால் மறைக்கப்பட்ட முட்புதர்கள், படுகுழிகள், பயங்கர மிருகங்கள்.... இப்படித்தான் பயமுறுத்துவதாக இருக்கும்.

வெல்லுகின்ற, சாதிக்கின்றதாகம இருப்பவர்களுக்கு அந்த மாறுதல்கள் பிடிக்கும். ஆனால், என்ன? ஒவ்வொரு அடியிலும் யோசித்து சூட்சுமங்களைக் கையாளவேண்டும்.

உங்களின் செயல்கள் யாரையும் காயப்படுத்தக்கூடாது. ஆனால், நீங்கள் தப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

எதிரிகளும், உங்களின் முன்னேற்றத்தை வேண்டாவெறுப்புடனாவது இரசிக்கவேண்டும். மனதிறகுள் ஆச்சரியப்படவேண்டும். சூட்சுமங்கள் சுவாரஸ்யமானவைகள்.

வெற்றி பெற்றவர்கள் அந்த இடத்தில் நிலைக்காமல் போவதற்கு, சூட்சுமங்களைப் பின்பற்றாததே காரணம். மனதை சுதந்திரப்படுத்துங்கள், சின்னச் சின்ன விடயங்களுக்காகச் சோர்ந்து போகாத வகையில் மனதைப் பக்குவப்படுத்துங்கள்.

இயற்கையை இரசிப்பது, இசையைக் கேட்பது, ஓவியம் வரைவது, பாடுவது, ஆடுவது எது முடியுமோ அதைத் தயங்காமல் செய்யுங்கள். மனித முகங்களையும், அவர்கள் வாழ்க்கையையும் உற்றுக் கவனியுங்கள்.

# அழகும் ஆரோக்கியமும் தரும் சத்துணவு




சம்மந்தப்பட்ட உணவு அதாவது, அதிக நார்ப்பொருள் கொண்ட குறை கொழுப்பு உணவுகள் - நமக்குத் தேவையான சக்தியை வழங்குவதுடன், உடல் அமைப்பைப் பேணவும் காரணமாக அமைகின்றது.

இளவயதிலே நாம் சீரற்ற உணவுப் பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தால், அதன் விளைவுகளை முதிர்ந்த வயதில் அறுவடை செய்ய வேண்டிவரும்.

இப்போதெல்லாம் நாம் அதிக பணம் செலவழித்து நோய்களை விலைக்கு வாங்குகின்றோம்.

சிலபேர் - ஒருவர் சாதாரணமாகச் சாப்பிடுவதைவிட, இரண்டு மடங்கு கூடுதலாகச் சாப்பிடுவார்கள். 70 வயது வரை எந்த தொல்லைகளும் அவருக்கு இருந்ததில்லை என்று சிலர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம்.

, அந் நாளில் இருந்தது, நீர்



அவர்களுக்கு உடலுழைப்பு இறைக்க எவ்வளவோ தூரம் நடந்துசெல்ல வேண்டியிருந்தது. தானியங்களை இடித்து மாவாக்க எவ்வளவோ சக்தியைச் செலவழிக்க வேண்டியிருந்தது. அவர்கள் சாப்பிடுகின்ற உணவு அடுத்த போசணத்திற்கு முன்பே ஜீரனமாகிவிடும்.

ஆனால், நாம் இருந்தால் வீடு, ஏறினால் வாகனம் என்று இருக்கிறோம். சுவிட்சைப் போட்டால் தானியம் மாவாகிறது.

ஒன்பது பேர் செய்யவேண்டிய வேலையை, ஒரு இயந்திரம் செய்து முடிக்கின்றது. எமக்கு என்ன வேலை இருக்கின்றது. 5 நிமிடங்களில் உணவு தயார். அது போதாதென்று உதவிக்கு உதவியாளர்கள் வேறு-

நிலமை இவ்வாறிருக்க, நாம் உணவுக்கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்காமல் இருந்தால் என்ன ஆகும்.

எமது அழகை மேம்படுத்த நாம் செய்யவேண்டிய அத்தியாவசியமான செயல் உடலிலுள்ள கழிவுகளை குருதி, இழையங்கள் முதலியவற்றிலிருந்து வெளியேற்றுவதாகும்.

கழிவுகள் வெளியேறுவதால் சருமம் பொலிவுபெறும், மிருதுவாகும், உடலமைப்பு சீராகும். உடலுக்குத் தேவையானவற்றை மட்டும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்?

நாம் உண்ணுகின்ற உணவில் 50 வீதம் பச்சைக்காய்கறி, பழவகை என்பன அடங்கியிருத்தல் வேண்டும். இவை இலகுவில் சமிபாடடையக் கூடியன.

இயன்றளவு உணவிலே உப்பைப் குறைத்துக்கொள்ள வேண்டும் கோப்பி, தேநீர் அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். மதுபானம் , சிகரட், முதலியவற்றையும் தவிர்க்கவேண்டும்.

நாளாந்தம் 2 தொடக்கம் 3 லீட்டர் நீரை சிறுநீராகவும், வியர்வையாகவும், சுவாசத்தினூடாகவும் இழக்கின்றோம். எனவே, சராசரியாக 1.5-2 லீற்றர் நீரை தினமும் உள்ளெடுத்தல் அவசியமாகின்றது.

நார்பொருளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய போஞ்சி, அவரை, கடலை, கோவா, தவிட்டரிசி என்பவற்றை அதிகமாக உணவில் சேர்த்துகொள்ள வேண்டும்.

**விற்றமின்களின் குறைபாடும் அவற்றைப்பெறும் வழிமுறைகளும்**

**விட்டமின் A:** இதன் குறைபாட்டினால் கண்ணின் வில்லையில் தடிப்பு ஏற்படுவதால், மாலைக்கண் தோன்றும். கண்ணில் எரிவு, கடித்தல், என்பன தோன்றும், களைப்பு தோன்றுதல், மணத்தை உணரும் திறன அற்றுப் போதல், முகத்தில் பருதோன்றி, அடையாளங்கள் புதுப்பிக்கப் படாமை, பல், எலும்பு என்பன மென்மையடைதல் போன்றவையும் காணப் படும், விட்டமின் A குறைபாடு ஏற்படுகிறபோது, கூடவே விட்டமின் C குறைபாட்டையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கரடுமுரடான உலர் சருமம் தோன்றும்வதோடு, சருமம் இளவயதிலேயே முதிர்ந்த தோற்றத்தையும் பெறும்.

(தொடரும்...)

# அழகாக இருந்து ஆனந்தம் பெறுவோம்

இன்று நம்மில் அழகாக இருக்கவேண்டும் என்று விரும்பாதவர்களேயில்லை. ஏதோவொரு வகையில் எல்லோரும் அழகாக இருப்பதில் ஆர்வமாகவே இருக்கின்றோம். ஆனால், அழகாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, முகத்தை மாத்திரம் மினிக்கிப் பெருக்கி வைத்தருப்பவர்கள்தான் நம்மில் அதிகம்.

மேனிழயகு என்பது - முகத்தை அழகாக வைத்திருப்பது மாத்திரம் தான் என்று கருதிவிடமுடியாது. கால், கால்விரல், கைவிரல் என்பதையும் வெளிப்பார்வையில் அழகாகத் தெரியக்கூடிய அத்தனை உறுப்புக்களும் அழகாயிருக்கவேண்டும்.

தினமும் ஐந்து முறை முகத்தை மாத்திரம் கழுவிக்கொண்டு, சவர்க்காரத்தால் பொலிவுபடுத்திவரும் தோழிகள் இன்னொரு விடயத்திலும் அவதானமாக இருக்கவேண்டும். முகத்திற்கு அடிக்கடி வாசனைச் சவர்க்காரங்களைப் பாவிப்பதன்மூலம், சருமம் தேய்ந்து போய்க் காலப்போக்கில் முக அழகு கெட்டுப்போக வழியேற்றப்படும்.

இப்போது முகம் தவிர்ந்த ஏனைய உறுப்புக்களை எவ்வாறு சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் வைத்து கொள்வதென்று நோக்கும் போது - கை, கால்களில் இருக்கும் நகங்களை சிலர் உரிய நேரத்தில் சுத்தம் செய்வதில்லை. அது வளர்ந்து வெட்டும் பருவம் வந்தும், அப்படியே விட்டு விட்டு பொறுமையாக இருப்பார்கள். கை எவ்வளவு தான் அழகாக இருந்தாலும், நகம் வளர்ந்திருந்தால் அதன் அழகு மங்கிவிடுகின்றது.

பெண்களைப் பொறுத்தவரையில் மெலிந்து, உயர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். பாவாடை, சட்டை அணிவதைவிட, சேலை அணிவது மிகவும் அழகாக இருக்கும்.

சில பெண்களுக்கு மீசைகூட முளைப்பதுண்டு. அதற்காக அவர்கள் ஆண்மைத்தன்மையுடையவர்கள் என்பதல்ல. இப்படி கால், கைகளில் அடர்ந்த மயிர் காணப்படுபவர்கள், உரிய மருந்துப் பொருட்களைப் பாவித்து அவற்றை உடலிருந்து நீக்கலாம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### பிரச்சினையின் ஆழத்தை சந்திரிகா உணர்வாரா?

திருகோணமலை துறைமுகத்துக்கும் கடற்படைத் தளத்துக்கும் விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீண்டுமொரு முறை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வலியுறுத்தியிருக்கிறார்.

கடந்த மாதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் இதே விதமான கருத்துடன் கூடிய கடிதமொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன்பின்னர், திருமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத்தளம் என்பன புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றன என வலியுறுத்தும் இரண்டாவது கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, புலிகள் பலம் பெற்றதற்குக் காரணமாக்க முற்படும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக சாட்டையடி கொடுத்துப் பதிலளித்திருந்தாலும் அவர் விடவில்லை.

இதனால், சில வாரங்களாக ஓய்திருந்த இந்தப் பிரச்சினைக்கு, மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஆறாம் திகதி உயிர் கொடுத்திருக்கிறார். மீண்டும் ஒரு கடிதம் பிரதமர் ரணிலுக்கு பறந்திருக்கிறது.

இதில் ரணிலின் பதில் கடிதத்துக்கு பதில்கள் கொடுக்கப்பட்டு கேள்வி மேல் கேள்விகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்வதேச பாதுகாப்பு வலை என்று கூறிக்கொண்டு திரியும் ரணில் - அரசு பாதுகாப்பு வலையில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தி புலிகள் பலம் பெற்றுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இன்னொரு இடத்தில், இராணுவத் தோல்விகளுக்கு ரணில் அரசு பொறுப்பாக்கப்பட்டிருக்கிறது. இதுபோலவே திருமலைத் துறைமுகத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்துள்ளதை முப்படைத் தளபதிகளும், அமெரிக்க அதிகாரிகளும் உறுதி செய்ததாகவும் சந்திரிகா கூறியுள்ளார்.

மொத்தத்தில் இந்தப் பதினொரு பக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குதல் என்பதைவிட புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான கருத்துக்களை வலியுறுத்துதல் என்பதை மையப்படுத்துவதாகவே உள்ளது.

இந்தக் கருத்து நிலை நாட்டில் ஒரு ஸ்திரமற்ற சூழ்நிலையை உருவாக்கி அதில் குளிர் காயமுற்படும் பாரம்பரியமான சிங்கள பௌத்த பேரினவாதப் போக்கு வெளிப்படையாகவே தோற்றம் பெறுகிறது.

திருமலை விவகாரத்தைத் தொடர்ந்து நீறுபூத்த நெருப்பாக்கி அங்கு பிரச்சினைகளுக்கு உயிர் கொடுக்க சந்திரிகா முற்பட்டுக்கொண்டிருக்கிறார். இதனால், அவர் அடைய முற்படும் ஆதாயம் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் ஆதரவைப் பெறுவதேயாகும்.

குரங்கு பாஞ்சான் விவகாரத்தின் மூலம் அடையத் தவறிய இலாபத்தை துறைமுகத்தினைப் பயன்படுத்தி அடைவதுதான் சந்திரிகாவின் திட்டமாகத் இருக்கிறது. இதேவேளை புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் - குரங்குபாஞ்சானுக்கு தென்பகுதி ஊடகவியலாளர்களை அழைத்துச்சென்று நிலைமையை நேரில் விளங்கப்படுத்தியிருக்கிறார்.

1996 இல் இங்கு முகாம் இருந்ததனை இந்தப் பகுதியில் இது போராளிகளின் கல்லறை என்பதையும் ஊடகவியலாளர்களுக்கு புலிகள் காட்டியுள்ளனர். குரங்குபாஞ்சானுக்குப் புலிகள் இப்போது வரவில்லை என நிரூபிக்கப் புலிகள் இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இது தென்பகுதியில் உண்மை நிலையை எடுத்துச் சொல்லியுள்ள தருணத்தில் தான் சந்திரிகாவின் கடிதம் தொடர்பாக செய்தியும் வெளியாகியது. இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பினும்- பிரச்சினைகளின் ஆழத்தை மேலும் வலுப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகள் திருகோணமலையில் பலம்பெறுவதாகக் கூறிக்கொண்டு - அங்கு திட்டமிட்ட இராணுவ மயமாக்கத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிடுகிறாரா என்ற சந்தேகமும் வலுப்பெறுகின்றது.

கடந்த காலங்களில் இப்படிப்பட்ட பொய் நியாயங்களினூடாகவே, தமிழ் மக்களின் பாரம்பரிய நிலப் பரப்புகள் அபகரிக்கப்பட்டதும், சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டதும் வரலாறாக நடக்கிறது.

இந்த நிலை நீடிப்பது சரியானதொரு அரசியல் சுமுக நிலைக்கு உதவமாட்டாதென்பதை சந்திரிகா உணரத் தவறிவிட்டார். இதன் விளைவுகள் வருங் காலத்தில்தான் அவரால் உணரப்படும்.

# ஊடகத்துறை சுதந்திரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது

## சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு பாராட்டு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்று, சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், ஊடகத்துறையின் சுதந்திரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக, பாரிஸில் இயங்கும் ஊடகவியலாளர் அமைப்பு கூறியுள்ளது.

பாரிஸில் தலைமையகத்தைக் கொண்டுள்ள "எல்லை கடந்த ஊடகவியலாளர்" (றிப்போட்டஸ் சான்ஸ் புரொன்ரியர்ஸ்) என்ற இந்த அமைப்பு, பிரெஞ்சு மொழியில் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிவந்த கொலை அச்சுறுத்தல், தாக்குதல்கள் போன்றவை பெருமளவுக்கு குறைந்துள்ளதாக, அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா அரசின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான வன்னிப் பகுதிக்கு ஊடகவியலாளர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியமை, அரச வானொலியூடாக பி.ப.சி. தமிழ், மற்றும் சிங்கள சேவைகளை ஒலிபரப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியமை, கொல்லப்பட்ட செய்தியாளர் நிமலராஜன் தொடர்பான விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றமை, ஊடகவியலாளர் இக்பால் அத்தாசுக்கு கொலைமிரட்டல் விடுத்த வான் படையினர் இருவருக்கு, கடும் தண்டனை வழங்கியமை போன்ற செயற்பாடுகளையும் அந்த அமைப்பு பாராட்டியிருக்கிறது.

## சிறுவர் இல்லத்தில் துஷ்பிரயோகம் 11 சிறார்கள் பொலிஸாரால் மீட்பு!

(கொழும்பு)

சிறி ஜெயவர்த்தனபுரவில் பராமரிப்பு இல்லம் ஒன்றில், பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட பதினொரு சிறார்களை - சிறுவர் நலன்பாதுகாக்கும் விசேட பொலிஸ்குழு மீட்டுள்ளது.

இது குறித்து, இந்தப் பொலிஸ்குழுவினர் சார்பில் தகவல் வெளியிட்ட திமுது கலபதி என்ற அதிகாரி-

விஜியசிறி சிறுவர் புனர்வாழ்வு இல்லத்தில், பொலிஸார் நடத்திய சோதனையின் போது - 9 வயதிற்கும் 13 வயதிற்கும் இடைப்பட்ட பதினொரு சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில், எட்டுப்பேர் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகியிருப்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. இதையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் ஏழு பேரையும் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.

## பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பு செய்யக்கூடாது

### திலக் கருணாரட்ண கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை நீடிப்புச் செய்யவேண்டாம் என்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் - சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா, பொது விருந்தொன்றில், பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருடன், அமர்ந்திருந்ததான புகைப்படம் ஒன்று - பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

இதனையடுத்தே - திலக் கருணாரட்ண - இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இந்த மாதம் 14 ஆம் திகதியுடன் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது.

இதன் பின்னர், பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை ஜனாதிபதி நீடிப்புச்செய்யக்கூடாது. இந்த விடயத்தில், பௌத்த மத பீடாதிபதிகளும் - ஜனாதிபதி சந்திரிகாவிற்கு வற்புறுத்த வேண்டுமென்றும், திலக் கருணாரட்ண மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பத்துலட்சம் ஆதரவாளர்களைத் திரட்டி கொழும்பில் மாபெரும் அரச எதிர்ப்பு பேரணி

## சுதந்திரக் கட்சித் தலைமை நடவடிக்கை

(கொழும்பு)

பத்து இலட்சம் ஆதரவாளர்களை ஒன்று திரட்டி, கொழும்பு நகரில் இந்த மாத இறுதியில், பாரிய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்துவதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் ஆதரவாளர்களைத் திரட்டிக் கொள்வதற்காக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனியாக குழுக்களை நியமிக்கவிருப்பதாக, கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீளப்புனரமைப்பது குறித்தும், ஆகக்கூடிய உறுப்பினர்களை கட்சியில் இணைத்துக் கொள்வது குறித்தும், கொழும்பு நகரின் மிகப் பெரிய அரச எதிர்ப்பு கூட்டமொன்றை நடத்துவது குறித்து, ஜனாதிபதி சந்திரிகா விசேட கூட்டம் ஒன்றில் ஆராய்ந்துள்ளார்.

கொழும்பில் இந்த மாத இறுதியில் நடத்த திட்டமிட்டிருக்கும் இந்தப் பேரணியில், பத்து இலட்சம் ஆதரவாளர்களை ஒன்றுதிரட்டும் வகையில் - கட்சியின் பிரதான அமைப்புக்குழு, நிதிக்குழு, கொழும்புக்குழு, சட்டம் மற்றும் பாதுகாப்புக்குழு, விவசாய, மருத்துவ, நுகர்வோர் விவகார இணைப்புக்குழு என்பவற்றுக்கும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக, மைத்திரிபால சிறிசேன சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும், கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். இந்தக் கடிதத்தில் - ஆதரவாளர்களைக் கொழும்புக்கு கொண்டுவர, தனியார் பஸ்கள், லொறிகள் மற்றும் போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்தக் கூடியளவான ஆதரவாளர்களை - கிராமப்புறங்களில் இருந்து அழைத்துவருமாறும், மைத்திரிபால சிறிசேன கேட்டுள்ளார்.

இந்தப் பேரணியில் - ஏனைய எதிர்கட்சிகளும் பங்கேற்கவுள்ளன. இந்தப் பேரணிக்குச் சுமார் இருபது லட்சம் ரூபாவைச் செலவிட சிறிலங்கா சுதந்திரக்கட்சி திட்டமிட்டுள்ளது.

## பொதுமகன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை!

யாழ்.நகர்ப்பகுதியில் வைத்து, கடந்த 19 ஆம் திகதி பொதுமகன் ஒருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணை நடைபெற்றது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரான - முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுந்தரலிங்கம் என்பவரே, கடந்த 21 ஆம் திகதியன்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை செய்திருந்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணைக்கு, சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலிஸாரும் சமூகமளித்திருந்தனர்.

இதன்போது, குறிப்பிட்ட நபரை கைதுசெய்யும்படி - வழங்கப்பட்ட உத்தரவின்படியே கைதுசெய்ததாகவும் - ஆனால் கைது செய்தமுறை தவறானது என, பொலிஸார் தெரிவித்தனர்.

## பட்டம்பெற்ற ஆண்டுவாரியாகவே இனிமேல் நியமனம் வழங்கவேண்டும்!

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

எதிர்வரும் காலங்களில் வழங்கப்படுகின்ற - அரச நியமனங்களில் பட்டதாரிகளை நியமிக்கும்போது, அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டுவாரியாக நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை வேலையில்லாமல் இருக்கும். பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பப்படவேண்டும். நான்கு வருடகாலமாக வேலையில்லாமல் இருக்கும். பட்டதாரிகளுக்கு - இதன்மூலம் வேலைவாய்ப்பு வழங்க முடியும். இந்த விடயங்கள் தொடர்பாக, யாழ்.மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அழுத்தமாகத் தெரிவித்துள்ளோம்.

இவ்வாறான தீர்மானங்கள் நேற்று ஆரியகுளம் உயர் கல்லூரியில் நடைபெற்ற வேலையற்ற சங்கக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, சங்கத்தின் உபதலைவர் பா.ஜெயதாசன் தெரிவித்தார்.

# கரையோர வளங்களைப் பாதுகாக்க திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்!

## செயலக மாநாட்டில் தெரிவிப்பு

வட பகுதியிலுள்ள கரையோர வளங்களை பாதுகாப்பதற்கான திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என, யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கரையோர வளங்கள் பேணல் பற்றிய விழிப்புணர்வுச் செயலமர்வில் கலந்துகொண்ட கடலோரப் பாதுகாப்புத்திணைக்களத்தின் முகாமையாளரான குணசிங்க தெரிவித்தார்.

நாம், எமது எதிர்காலத்திற்காக சிந்தித்து செயற்படவேண்டும். சரியான திட்டமிடல் இல்லாமையினாலலேயே, எமது நாட்டின் வளங்கள் பேணப்பாடாமல் அழிகின்றன. அவற்றைப் பேணும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

திட்டமிடலில் சிறந்த முகாமைத்துவ தந்திரோபாயங்களை கையாளவேண்டும்.

இந்தவகையில் - பொதுமக்கள், கல்விமான்கள், மாணவர்கள் அனைவருக்கும் வளங்கள் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாடு மூலம், வளங்களை பேணமுடியும் எனத் தெரிவித்தார். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி முகாமையாளர் காமினி ஹேகவே பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் பரதேச செயலாளர் கரையோரப்பகுதி கிராமசேவையாளர்கள் காணி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இந்த வார பலன்கள்

## 10.10.2003 ~16.10.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சந் | ராகு | | சனி |
| செவ் யுரே | 10 பி.இ. 3.57 மே - சந்<br>13 பி.ப. 4.20 இட- சந்<br>15 பி.இ 5.23 மிது - சந் | | |
| நெப் | | | குரு |
| | | சுக் கேது | சூ புத |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



இந்த ராசியிற் பிறந்தவர்களுக்குத் தொழில் முயற்சிகளில் ஊக்கமின்மை காணப்படும். மனத்தில் நிம்மதிக் குறைவும், கவலையும் தோன்றும். இடையிடையே தேகசுகம் பாதிப்படைவதால், வைத்தியச் செலவு அதிகமாகும். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். பிள்ளைகளால் நன்மை உண்டு. வெளிநாட்டுப் பிரயர்ணங்களில் தாமதம் காணும். திருமண வாழ்வுக்காகக்காத் திருப்போர் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்திலுள்ளோர் வேலைப்பளு, இடமாற்றம் போன்ற காரணங்களால் அதிருப்தியடைவர். புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்ப்போருக்குத் தாமதம் காணும். வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறுவர். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருக சீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குத் தொழிற் துறையில் உற்சாகமும், லாபமும் உண்டாகும். தேகநிலை நன்றாக அமையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். உறவினர், நண்பர்களின் வரவுகள் அதிகமாகும். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆவல் கூடுதலாக இருக்கும். பணிநிலை நன்றாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் பிணக்குகள் ஏதும் இருப்பின் - அவை தீரும். மங்கள வாழ்க் கையை எதிர்பார்ப்போருக்குக் கருமம் கைகூடும் வாய்ப்பு உண்டு. பிற நாட்டிலிருந்து சுபசெய்திகள் கிடைக்கும். குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். உத்தியோகத்திலுள்ளவர்கள் சில சிக்கல்களை எதிர்நோக்கினாலும், தமது கருமத்தைத் திறம்படச் செய்து நன்மதிப்பை பெறுவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நன்கு விற்பனையாகும், பணம்சேரும். மாண வர்களுக்கு ஏற்பட்டிருந்த குறைபாடுகள் நீங்கும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இவ் ராசியினருக்குத் தொழில் நன்றாக இருப்பினும், மத்திமபலனையே காண்பர். மனதில் தளம்பலும், ஊக்கக்குறைவும் காணும். வரவிலும் பார்க்கச் செலவு கூடுதாக இருக்கும். குடும்பத்தில் இடையிடையே மனக்கசப்புகள் தோன்றும். அயலவர்கள், நண்பர்களின் உதவி உண்டு. பிரயாணத்தை மேற்கொள்ளுவோர், தமது பொருட்களை இழக்க நேரிடலாம். திருமண வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். உத்தியோகத்திலுள்ளோர் தமது தொழில் சிறப்பால் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வெளிநாட்டுப் பொருட்கள் வியாபாரம் செய்வதால், அதிகலாபம் கிடைக்கும். மாணவர்கள் தமது முயற்சியால் நற்பெறுபேறுகள் பெறுவர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் விடயத்தில் புதுத்தென்பும், புதிய அனுபவங்களும் ஏற்படலாகும். மனதில் உற்சாகமும், சந்தோஷமும் ஏற்படும். பொருளாதாரநிலை சிறந்து காணப்படும். தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்றாக இருக்கும். தொழில் சம்பந்தமாகப் பிரயாணங்கள் ஏற்படலாகும்.

வெளி நாட்டுப் பிரயாணங்களை எதிர்பார்ப்போருக்கும் நன்மையாக அமையும். தூர தேசத்து உறவினரின் வருகையால் வீட்டில் குதூகலமும், மகிழ்ச்சியும் காணப்படும். மங்கள வாழ்க்கைக்காகக் காத்திருப்போருக்கு, யாவும் சந்தோஷமாக அனுகூலமாகும். உத்தியோகத்தர்கள் முன்பிருந்த சில கஷ்டங்கள் நீங்கி, சிறப்பாகச் செயற்படுவர். வியாபாரிகளுக்கும் தொழில் சிறப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர்வர். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம், சித்தி உண்டாகும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம)*



இவர்களுக்கு தொழில் நிலையில் எதிர்பார்ப்புகள் அனுகூலமாக அமையும். பண வருவாய் நன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். இனசன பந்துக்களின் வருகை அதிகரிக்கும். தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு.

பிறநாட்டுப் பிரயாணங்களை எதிர்பார்ப்போர் நன்மை பெறுவர். நண்பர்கள் பல வகையாலும் உதவுவார்கள். பிரயாணங்களின்போது அவதானமாக இருக்கவும் திருமணத்தை எதிர்பார்ப்போர் சந்தோஷமான வாழ்க்கையை அனுபவிப்பார். உத்தியோகத்திலிருப்போர் தமது அபிப்பிராயப்படியே கருமங்களை ஆற்றி, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். வியாபாரிகளுக்கு பழைய முதலீடுகள் நல்ல விலைக்குப் போகும். மாணவர்கள் முயற்சிக்கேற்ப நற்பலனைக் காண்பர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை*



கன்னி இராசியினருக்குத் தொழில் முன்னேற்றமும், உயர்சியும் உண்டு. மனஉறுதியும், விடாமுயற்சியும் நல்ல பலன்களைத் தரும். அந்நியரால் உதவி கிட்டும். தேக சௌக்கியம் நன்றாக இருக்கும். பெரியோர்களின் தொடர் புகள் ஏற்படலாம்.

தொடங்கும் கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். நண்பர்கள் உதவியாக இருப்பர். திருமணம் சம்பந்தப்பட்ட விடயங்கள் சற்றுத் தாமதமடையும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களின் எதிர்காலத் திட்டங்கள் நன்மையளிக்கும். வியாபாரத்துறையினருக்கு விற்பனை சாதாரணமாகவே இருக்கும். மாணவர்கள் தங்கள் கல்வியில் ஊக்கம் எடுத்தல்வேண்டும்.

### துலாம்

*(சித்திரை 3,4ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குச் செய் தொழிலில் நிம்மதியற்ற நிலையும், கவலையும் கூடுதலாக இருக்கும். மனதில் விரக்தி மனப்பான்மை தோன்றும். உடல்நலனை நன்கு பேணுதல் வேண்டும். வைத்தியச் செலவும் கூடுதலாகவே இருக்கும். குடும்பத்தில் அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கமுடியாமல் திண்டாடுவார்கள். காணி, வீடு சம்பந்தமான பிரச்சினைகளும் தலைதூக்கும். தெய்வ நம்பிக்கையும், வழிபாடுகளும் கைகொடுக்கும். காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தையே தரும். உத்தியோகத்தினர் தாம் விரும்பியவாறு வேலை செய்வது சிரமம். வியாபாரிகளுக்கு விற்பனை குறைவதால் வருவாய் குன்றும். மாணவர்களுக்கு ஊக்கமின்மை காணப்படும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்கள் பலசிக்கல்களின் மத்தியிலேயே தொழில்களைத் தொடர வேண்டியேற்படும். மனதில் சோர்வும், அதிருப்தியும் காணப்படும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். குடும்பத்தில் மனக்கசப்புகள் தோன்ற இடமுண்டு. எதிர்பார்த்த உதவிகள் கிடையாமல் போகலாம். வீண் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். திருமணம் சம்பந்தமான விடயங்கள் கைநழுவிப்போகும். சிலருக்கு இடமாற்றங்களும் ஏற்படலாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு, இடமாற்றம், வசதிக் குறைவு போன்ற பலன்கள் ஏற்படும். வியாபாரிகளுக்குத் தொழில் சீராக இராது. வாடிக்கையாளர்கள் விலகிப்போக நேரிடும். மாணவர்கள் வீண்விரயங்களில் பொழுதைப் போக்குவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இந்த இராசிக்காரர்களுக்கு - குரு ஒன்பதில் சஞ்சரிப்பதால், பலவகை யான முன்னேற்றங்களும், தொழில் வாய்ப்பும் கிட்டும். நல்ல வருவாய் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தில் சந்தோஷமும், குதூகலமும் காணப்படும். நண்பர்கள், விருந்தாளிகளின் வரவு அதிகரிக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும். புதுமண வாழ்க்கை கைகூடி, மகிழ்ச்சியுடன் காணப்படுவர். புதிய தொழிலை ஆரம்பிப்பதற்கு உகந்த காலமாகும். உத்தியோகத்தர்கள் சிறப்புடன் கருமம் ஆற்றி, பலரின் பாராட்டைப் பெறுவர். புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்ப்பவர்களுக்கும் நற்பலன் கிட்டும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்படைந்து நல்ல வருவாய் தரும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பும் பாராட்டுகளும் கிட்டும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குத் தொழில் வருவாய் மத்திம பலனையே கொடுக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதமாகவே நிறைவுபெறும். வருவாயிலும் பார்க்க செலவு அதிகமாகும். இடையிடையே தேகசுகக் குறைவும் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. ஏமாற்றுப் பேர்வழிகளிடம் அகப்படக்கூடும். வீட்டில் சுப கருமங்கள் நிகழ இடமுண்டு. குடும்பத்தில் வாக்குவாதங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணங்களின் போதும் அவதானம் தேவை. மங்கள நிழ்வுகள் தாமதப்பட்டுக்கொண்டுபோகும். உத்தியோகத்தர்கள் மிகுந்த சிரமத்துடன் தமது கருமங்களைச்செய்ய நேரிடும். வியாபாரிகள் முத லீடுகளை விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர் நோக்குவர். மாணவர்கள் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் கால்கள் சதயம் பூரட்டாதி 1, 2 3 ஆம் கால்கள்)*



கும்பராசியில் பிறந்தவர்கள் தமது தொழிலில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். பணச் செலவைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். வருவாய்க்கேற்றவாறு செலவு செய்யாவிட்டால், கஷ்டத்தைச் சமாளிக்கமுடியாமல்போகும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை காட்டும். நண்பர்கள் உதவுவார்கள். வெளிநாட்டுப் பயணகாரர் தாமதித்துப் போகவேண்டியிருக்கும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்குத் காலதாமதம் காட்டும். உத்தியோகத்தர்கள் சில சிரமங்கள் இருப்பினும், தமது முயற்சியால் சமாளித்துக்கொள்வர். வியாபாரிகள் அதிக வியாபாரத்தை எதிர்பார்க்க முடியாது. மாணவர்கள் ஊக்க மெடுத்தலன்றி முன்னேற முடியாது.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



இவர்களுக்குச் செய் தொழிலில் பலருடைய உதவிகள் கிட்டும். முயற்சிக்கேற்ப வருவாய் கிடைக்கும். தேகசுகம் அதிகம் பாதிப்படையாது. மனநிம் மதியும், நிறைவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். குடும்பத்தில் சந்தோஷமும், குதூகலமும் காணப்படும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பட இடமுண்டு. தூரத்து உறவினர்கள் வருகை தருவார்கள். திருமணமாகாமல் கவலையுற்றிருப்பவர்கள் விரைவில் சந்தோஷமடைவார்கள். உத்தியோகத்தை எதிர்பார்க்கும் இளவயதினர் நன்மை பெறுவார்கள். உத்தியோகத்திலுள்ளோர் தமது நற்செயல்களால் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு பணம சேரும். தொழில் சம்பந்தமான பிராயாணங்களும் ஏற்படும். மாண வர்கள் நற்பண்பினால் பாராட்டுக்களைப் பெறுவர்.

"

---

### தரம் மூன்றிற்கும் தரம் ஒன்பதிற்கும் இடைப்பட்ட

# ஊனமுற்ற மாணவர்களின் விபரம் திரட்டப்படுகின்றது

தீவக கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களில் - விசேடகல்வி தேவையான மாணவர்கள் விபரம் திரட்டப்பட்டு வருகிறது.

பாடசாலைகளிலுள்ள கட்புல, செவிப்புலக் குறைபாடு, திக்குவாய், வாய்பேசமுடியாத மற்றும் மூளை வளர்ச்சி குறைவான பிள்ளைகளின் விபரமே திரட்டப்பட்டுவருகிறது.

அத்துடன், வாய்பேசமுடியாத மாணவர்களுக்கு கற்பிக்கும் திறனுடைய ஆசிரியரும், கண்பார்வையற்ற மாணவர்களுக்கு "பிறெய்ல்" எழுத்துக்கள் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் விபரமும் திரட்டப்படுகின்றது.

மேலும், இம்மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடிய உபகரணங்கள் பாடசாலைகளில் இருப்பின் அல்லது தேவைப்படின், அது பற்றிய விபரங்களைச் சேர்த்து எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் - உதவிக்கல்விப் பணிப்பாளர் (முறைசாராக்கல்விப் பிரிவு), கல்வி வலயம், வேலணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

எழுத, வாசிக்க இடர்ப்படுகின்ற தரம் 3 இற்கும், தரம் 9 இற்கும் இடைப்பட்ட மாணவர்களின் விபரத்தையும் இந்தத் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகிறது.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழா, கலைவிழாவின்போது ஆசிரிய பயிலுனர்களால் மேடையேற்றப்பட்ட நடன நிகழ்வைப் படத்தில் காணலாம். (83)

ஈராக் தலைநகர் பக்தாத்தில்

# பொலிஸ் நிலையம் மீது தற்கொலைத் தாக்குதல்;

# மூன்று பொலிஸார் உட்பட எட்டுப் பேர் பலியாகினர்!

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சாடர் என்ற நகரில் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில், 3 பொலிஸார் உட்பட 8 பேர் பலியாகினர். 12 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தமது சம்பளத்தைப் பெறுவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் காத்திருந்த வேளையில், வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றில் வந்த தற்கொலையாளி பொலிஸ் நிலையக் கதவுடன் வாகனத்தை மோதி வெடிக்க வைத்துள்ளார்.

குண்டுதாரி வாகனத்தை அதி வேகமாக ஓட்டிவந்ததால், காவற் கடமையில் நின்ற பொலிஸாரினால் அந்த வாகனத்தை தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டதாக பொலிஸ் அதிகாரியான பாசீன் முகமட் தெரிவித்தார்.

இதேவேளை - பக்தாத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வேறொரு சம்பவத்தில் ஸ்பானியத் தூதரக அதிகாரியொருவர் கொல்லப்பட்டதாக ஸ்பானிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட அதிகாரியான யோஸ் அன்ரோனியோ பேர்னால், தூதுவராலயத்தின் தகவல் பிரிவில் கடமையாற்றி வந்துள்ளார். துப்பாக்கிதாரியிடமிருந்து தப்பியோட முற்பட்டவேளையிலேயே



இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் மீதான அமெரிக்காவின் போருக்கு ஸ்பானியா முழு ஆதரவை அளித்துவந்ததும், அந்நாட்டுத் துருப்புக்கள் 1300 பேர் ஈராக்கில் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# சிரியா மீதான பொருளாதாரத் தடைக்கு அமெரிக்க காங்கிரஸ் அனுமதியளித்தது



சிரியாவின் மீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவதற்கு அமெரிக்க காங்கிரஸ் அனுமதி அளித்துள்ளது.

தீவிரவாதத்தைத் தூண்டுவதாகவும், பேரழிவைத் தரக்கூடிய ஆயுத உற்பத்திக்கு முயற்சிகள் செய்து வருவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

சிரியா, அமெரிக்காவுடன் தற்போது எதுவிதமான வர்த்தகத் தொடர்புகளையும் வைத்திருக்கவில்லை.

ஆனால், அமெரிக்காவிற்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கோ முதலிடுவதற்கோ சிரியாவுக்கு அனுமதி மறுப்பதற்கு தற்போது கொண்டுவரப்பட்டுள்ள பொருளாதாரத் தடை வழி செய்கின்றது.

தடை தொடர்பாக 33 - 2 என்ற விகிதத்தில் அமெரிக்கக் காங்கிரஸ் பிரதிநிதிகள் வாக்களித்துள்ளனர். இதன்மூலம் புதிய தடைகளுக்கும் சட்டம் வழி செய்யலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் சிரியாவின் எல்லைப் பகுதியில் அமைந்த பலஸ்தீனியர்களின் பயிற்சி முகாம் என அழைக்கப்பட்ட முகாம் ஒன்றில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவிக்க மறுத்திருந்தது. இதனிடையே ஈராக்கின் மீதான அமெரிக்காவின் போரில் சதாம் ஆட்சியில் இருந்த - அமெரிக்காவால் தேடப்பட்ட பலருக்கு சிரியா புகலிடம் கொடுத்து வருகின்றமை குறித்து அமெரிக்கா கண்டனம் தெரிவித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயகத்தில் பர்மா முன்னேற்றமா? முற்றாக மறுக்கிறது அமெரிக்க அரசு!

பாலியில் நடைபெற்றுவரும் ஆசிய நாடுகளின் வருடாந்த மாநாட்டில், பர்மாவில் ஜனநாயக செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு அமெரிக்கா தனது மறுப்பைத் தெரிவித்திருந்தது.

சுதந்திரமாக எதிர்க்கட்சிகள் செயற்படுவதும், எதிர்க்கட்சித் தலைவி 'அங் சான் சூசி' நிபந்தனை அற்றமுறையில் விடுவிக்கப்படுவதும், அவரது கட்சி சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிப்பதும் ஜனநாயக முன்னேற்றத்திற்கான அடிப்படைகள் எனவும் அமெரிக்கா தெரிவித்தது,

இதனிடையே பர்மாவின் பிரதம மந்திரி 'கின் நியான்ற்' ஜனநாயகத்தின் பாதை வரைபு ஒன்றைத் தயாரித்துள்ள கருத்து வேறுபாடு தொடர்பாக ஏசியான் பாராட்டு தெரிவித்திருந்த வேளையில், அமெரிக்கா மறுப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சிகள் அந்த வரைபில் பங்குபற்றாதவரை அந்தப் பாதைவரைபு பயன்தரமாட்டாதென கருத்துத் தெரிவித்துள்ளது.

மேலும் நிபந்தனை அற்றமுறையில் எதிர்க்கட்சித் தலைவி விடுவித்தலும் அவரது காரியாலயம் சுயமாக இயங்க அனுமதித்தலும், அவசியமானதென அமெரிக்கா மேலும் தெரிவித்தது. மே மாதம் 30 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவி 'அங் சான் சூசி' கைதுசெய்யப்பட்ட பின் பொருளாதாரத் தடையை பர்மாவிற்கு எதிராக அமெரிக்கா விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

ஆப்கானிஸ்தான் கிராமப் பகுதிகளில் இயங்கும்

# இரு குழுக்களிடையேயான மோதலில் 60 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்!



(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் கிராமப் பகுதிகளுக்கிடையே இயங்கும் இரு போட்டிக் குழுக்களிடையே நடைபெற்ற மோதலில் 60 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் மசார் இசரிப் என்ற நகரின் தெற்கில் கடந்தபுதன்கிழமை நடைபெற்றது. இத்தத் தாக்குதலில் டாங்கிகளும், மோட்டார் குண்டுகளும் பாவிக்கப்பட்டதாகவும் இப்போரில் ஈடுபட்ட முகவர் கொல்லப்பட்டதாகவும் குழுத்தலைவர் 'டொஸ்ரம்' தெரிவித்தார்.

குழுத்தலைவர்களாகிய 'டொஸ்ரம்', 'மொகமட் அட்டார்' ஆகிய இருவரும் ஆப்கானிஸ்தானின் வடபகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முயற்சிசெய்து வருகின்றனர். இவர்கள் ஜனாதிபதி கமிட் ஹர்சயின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தலிபான் அரசு, கிராமப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் இருப்பதற்கு இந்தக் குழுக்களின் செயற்பாடுகளே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

## ஊர்சுற்றி எழுதுவது

அன்னையும் தந்தையும் தானே பாரில் அண்டசாசரம் கண்கண்ட தெய்வம்

இது பழையதிரைப்படப் பாடலில் வரும் வரிகள். எம்.கே.தியாகராஜா பாகவதரின் வெண்கலக்குரலில் அழுத்தம் திருத்தமான சொற்களில் இப்பாடல் ஒலிக்கும். மக்கள் மெய்மறந்து பாட்டின் பொருளும் விளங்கக் கேட்டு இரசித்தனர்.

அக்காலத்தில் வெளிவந்த தமிழ்ப் படங்கள் பக்திப் படங்களானாலும் சரி சமூகப் படங்களானாலும் சரி மக்கள் வாழ்க்கையில் பின்பற்றக் கூடிய நன்நெறிகளை எடுத்துக் காட்டும் படங்களாக இருந்தன.

இன்று வரும் படங்களில் உள்ள பாடல்கள் இக்கால இளசுகளுக்குத்தான் புரியும். படங்களில் கதையோ படம் எதை மக்களுக்குச் சொல்கிறது என்பது எவருக்கும் தெரியாது. பாடல்களில் வரும் சொற்கள் விளங்காதபடி அதன் இசையின் பெருத்த ஓசை எல்லாவற்றையும் விழுங்கிவிடும்.

ஓடிப்போயி கல்யாணம் தான் கட்டிக்கலாமா?
கல்யாணம்தான் கட்டிக்கிட்டு
ஓடிப்போலாமா?

இன்றைய தமிழ் சினிமாப்படத்தில் உள்ள ஒரு பாடலில் வரும் வரிகள் இவை.

கொழும்பிலுள்ள எனது உறவினர் ஒருவரின் வீட்டுக்கு வேறொரு அலுவலாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

அந்த வீட்டுப் பையனின் தாயார் பேசினார். அவரது குரலிலேயே நோய்வாய்ப்பட்டிருப்பது தெரிந்தது. கவலையுடன் பேசினார். வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டு சத்திர சிகிச்சை செய்துகொண்டதாகச் சொன்னார். உடல் நலம் பற்றி விசாரித்தேன். தனது நோய் பற்றிக் கவலைப்படவில்லை. அதற்கும் மேலாகத் தனது மகனின் செயல் பற்றியே அதிகம் கவலைப்பட்டார்.

அவரது மகனுக்குப் பதினெட்டு வயது இப்போது தான் நிறைவு பெற்றிருந்தது. முகத்தில் மீசை கூட இப்போதுதான் அரும்பியிருக்கிறது. கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். கொழும்பில் அவனுக்கு படிப்பே வருவதாகத் தெரியவில்லை. மாத்தறையில் ஒரு நல்ல கல்விக் கூடத்தில் சேர்த்து அங்கேயே விடுதியில் தங்கிப் படிக்கவும் தாயார் ஏற்பாடு செய்திருந்தார். சில மாதங்களுக்கு முன் வீடுமுறையில் வந்த அந்தப் பையன் திரும்பிக் கல்லூரிக்குச் செல்லவில்லை. சினிமாவில் தொலைக்காட்சித் தொடர்களில் வந்த காதல் காட்சிகள் வாழ்க்கையிலும் வரத் தொடங்கி விட்டது.

எதிர் வீட்டிலிருந்த ஒரு பெண்ணுக்கும் இவனுக்கும் அது ஏற்பட்டது. அவளுக்கும் வயது பதினெட்டு. தாயார் புத்தி சொன்னார். தகப்பனார் கண்டித்துப் பார்த்தார். உறவினர்கள் சொல்லிப் பார்த்தனர்.

ஓடிப்போயி கலியாணம்தான் கட்டிக்கலாமா என்று போய்விட்டார்கள்!

இவர்களின் எதிர்காலம் என்ன? இதைப்பற்றியெல்லாம் இப்போது யாரும் சிந்திப்பதில்லை. சிந்தித்தும் பயனில்லை. இதுதான் இப்போதைய ஜெட்வேக முன்னேற்றம் என்றார் நண்பர். எல்லாவற்றுக்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டுமென்றார் அவர்.

முன்னரெல்லாம் பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது மாணவர்களிடையே குழுக்கள் உருவாவது உண்டு. இது எப்போதும் எங்கேயும் இருக்கும் பழக்கம் தான். இந்தக் குழுக்களிடையே நட்பும் இருக்கும். போட்டிகளும் உருவாகும், பொறாமையும் தோன்றும். இக் குழுக்களிடையே முறுகல்களும் மோதல்களும் ஏற்படும். அடிபடுவார்கள் பெரியவர்கள் தலையிட்டு இருதரப்பையும் கண்டித்துக் கலைத்து விடுவார்கள். அவர்களும் பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுத்துக் கலைந்து செல்வார்கள்.

இப்போது இளவட்டங்களுக்குள் ஏற்படும் மோதல்கள் முறுகல்கள் கொலை வரை போய் முடிகின்றது என்றார் நண்பர்.

இதற்கென்ன காரணம்?

இளவட்டங்களுக்குக் கஷ்டம் தெரிவதில்லை. பெற்றோர் எப்படியோ வீட்டில் அவர்களுக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கின்றார்கள் போதாக் குறைக்கு வெளிநாட்டுப் பணவசதி, சுலபமாக வர்த்தகப்பேரம் பேசும் தொழில். கட்டுப்பாடில்லாமல் பெற்றோர் பிள்ளைகளை வளர்ப்பது இவைதான் காரணம். இவற்றுக்கு வசதியாக திரைப் படங்கள், தொலைக்காட்சிப் படங்கள் உதவுகினறன என்றார் நண்பர்.

கொழும்புப் [illegible]குதியில் ஒரு இடத்தில் சிறுவர் புனர்வாழ்வு நிலையமொன்றில் முறைகேடாகச் சிறுவர்களை நடத்திய புத்தபிக்குகள் உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறுவர்களைப் பலவந்தமாகப் புலிகள் படையில் சேர்க்கிறார்கள் என்று சிங்கள, ஆங்கில ஊடகங்களும் கதிர்காமர் போன்றோரும் ஓலமிடுகின்றார்களே. இப்படிச் சிறுவர்களை முறைகேடாக நடத்தும் செய்திகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கேள்விப்பட்டதுண்டா?

முதலில் தென்னிலங்கையில் உள்ள சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு வழி தேடட்டுமே!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளின் மட்டக்களப்பு தளபதிகளுடன் அமைச்சர் ஹக்கீம் சந்தித்துப் பேச்சு!

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலையும், நேற்றுக்காலையும் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினருக்கும் இடையே நடைபெற்றது.

வாழைச்சேனை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு சந்திப்பு ஆரம்பமாகி நேற்றுக்காலையில் நடந்தது.

விடுதலைப் புலிகள் . தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிதித் துறைப் பொறுப்பாளர் நிசாமும் இதில் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் தரப்பில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஹக்கீம் - இந்தச் சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமான கலந்துரையாடலாக அமைந்ததாகவும், முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது வாகனங்கள் காணாமல்போதல், காணிகள் தொடர்பான பிரச்சினைகள் ஆகிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகக் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களுடன் தொடர்ந்து மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் மூலம் - அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என விடுதலைப் புலிகள் இந்தச் சந்திப்பில் தெரிவித்தனர்.

எதிர்வரும் சனிக்கிழமை வாகனேரியில் இது தொடர்பாக சந்திப்பொன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு, வவுணதீவு மற்றும் வாழைச்சேனை பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் லைலா வடாவி தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். புண்ணியமூர்த்தியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிஷாந், நீதித் துறைப் பொறுப்பாளர் குக[illegible]ன் ஆகியோரும், தமிழ்த்தேசிய [illegible]ட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கமும் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்கள் சார்பில், பிரதி அமைச்சர் பஸீர் சேகுதாவூத், ஏறாவூர் பிரதேசசபையைச் சேர்ந்த ஏ.அபதுல் நாஸார், அ்புக் கண்ணியா, வை.எல்.எம்.முபீன், ஜே.ஜலால் டீன், எம்.ரி.பறீட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் - முஸ்லிம்களின் வயல் நிலங்களில் நெற்செய்கையினை மேற்கொள்ள அனுமதியளித்தமை தமக்குத் திருப்தியைத் தருவதாகத் தெரிவித்தனர். அத்துடன், இதுபோன்ற சந்திப்புக்களை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய இடங்களிலும் நடாத்தி அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள[illegible]ம் எனத் அவர்கள் மேலும் தெரிவித்[illegible]னர்.

## ஐரிஸ் நாடாளுமன்ற விஜயத்தில் புலிகளின் பிரதிநிதிகள் குழு







## இராணுவ பிரதித் தலைமை...

கௌரவித்தார்.

மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட தற்போது தொண்டர்படைத் தளபதியாகப் பதவிவகித்து வருகிறார். தொண்டர் படைத்தலைமையகத்திலேயே மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தமது உத்தியோக பூர்வ கடமைகளை மேற்கொண்டு வருகிறார்.

மேஜர் ஜெனரல் சாந்தகொட்டேகொட 33 வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றிவருகிறார். இவர் ஏ 9 வீதியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக, படையினர் மேற்கொண்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் முக்கியமான பங்கு வகித்த 55 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்தவர்.

பின்னர் இராணுவத் தலைமையக நிர்வாக இயக்குநராகவும், வன்னி இராணுவத் தலைமையகக் கட்டளைத் தளபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் - முஸ்லிம் மக்களிடையே...

இழுத்து முஸ்லிம்கள் தாக்குதலை நடத்தினர்.

இதன்பின் அங்கு வந்த பொலிஸார் தமிழரை அடித்த முஸ்லிமை கைதுசெய்து சீனன்குடா பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றனர். அங்கு ஆர்ப்பாட்டமாகச் சென்ற முஸ்லிம்கள் கைதுசெய்தவரை விடுவிக்குமாறு கோரினர். இதையடுத்து பொலிஸார் கைதுசெய்தவரை விடுவித்தனர். இதனுடன் நேற்று முன்தினம் பதற்றம் ஓரளவு தணிந்து காணப்பட்டது.

நேற்றுக் காலை ஆலங்கேணியில் இருந்து குட்டிக்கரச்சி எனும் இடத்திற்கு பொருள் வாங்கச்சென்ற க.ஜெயக்குமார் என்பவரை முஸ்லிம்கள் குட்டிக்கரச்சியில் அடித்ததுடன் அவர் சென்ற துவிச்சக்கரவண்டியையும் சேதப்படுத்தினர். அதன்பின் தம்பலகாமத்திலிருந்து ஆலங்கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரவிதாஸ் வயது 17 என்பவரை இடிமண் என்ற இடத்தில் வைத்து முஸ்லிம்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதன்போது இடிமண் பகுதியில் உள்ள தமிழர்கள் ஏன் அந்த அப்பாவியைத் தாக்குகின்றீர்கள் அவர் வழியால் போய்க்கொண்டிருந்தவர் என தாக்கிய முஸ்லிம்களைக் கேட்டபோது நீங்கள் கதைத்தால் உங்களது வீடுகளையும் கொழுத்தி உங்களையும் கலைப்போம் என தெரிவித்தனர். இதனால் அச்சமடைந்த எரிமண், பைசல் நகர பிரதேசங்களை சேர்ந்த 70 தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஈச்சதீவு விபுலானந்த வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

பின்னர் முஸ்லிம்கள் கிண்ணியா பிரதேச சபைக்கு முன்னால் தமக்கு பாதுகாப்பு இல்லை எனவும் எனவே தமக்கு ஆயுதம் தரவேண்டும் எனவும்கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த இடத்திற்கு வந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களை அடுத்து நேற்று மாலை 6மணியளவில் அந்தப் பிரதேசத்தில் 12 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது. (04,10)

## பாணந்துறையில் வெடிபொருட்கள் மீட்பு

பாணந்துறையிலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட பெருமளவு ஆயுதங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவரின் வீட்டிலிருந்தே- பெருமளவு ஆயுதங்களும், வெடி மருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (01)

## உதைபந்தாட்டப் போட்டி

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று பி.ப 2.15 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் 14, 16, 18 மற்றும் 20 வயதிற்குட்பட்ட அணிகள் விளையாடவுள்ளன.

## திருமலையில் வழிமறிப்புப் போராட்டம்

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெற்ற சம்பவங்களை எதிர்த்து - இன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் மறியற்போராட்டமொன்றினை நடத்தவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு ஒலுவிலில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலை வளாகத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (07)

## புலிகள்....

துச் சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமது கட்டளைக்குள் இருப்பதாகவும் கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி செனிவரட்ன தெரிவித்துள்ளார். (01)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectures by: Mr.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
12.10.2003
ஞாயிறு காலை 9.00 மணி
Saturday / Sunday - 9 A.M - 10 AM
HARY'S INSTITUTE
இல.564 கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி-1662)

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## தனித்தரப்பாக பங்கேற்க வலியுறுத்தி மறியற்போராட்டம் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற அங்கீகாரம் வழங்கவேண்டும் என்றுகோரி, மறியற்போராட்டங்களை நடத்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஏச்.எம்.பௌசியின் இல்லத்தில் நடைபெற்ற முஸ்லிம் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த கட்டமாக ஆரம்பிக்கப்படும் சமாதானப் பேச்சுக்களின்போது முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்ற அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்தியே மறியற் போராட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கும் முடிவுசெய்யப்பட்டது. இந்த விவாதத்துக்கு முன்பதாகவே மறியற்போராட்டங்களை நடத்துவது என்றும் முடிவுசெய்யப்பட்டது. (01)

## ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க அமைச்சுப் பதவி வழங்கத்தயார்!

### அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டணி ஏற்படுத்துவதற்காக அவர்கள் கேட்கும் எந்த அமைச்சுப் பதவியையும் வழங்குவதில் எந்தத் தவறும் இல்லை என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நேற்று களுத்துறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது, பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்கனவே இடதுசாரிகளுக்கு அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளனர். அதன்மூலம் சிறந்த ஆட்சி ஏற்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணிக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் எனவும் அனுரா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரிகள்...

மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சென்று துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது, சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும், இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் வடக்கு - கிழக்குப் பிரதேசம் தனிநாடாகப் பிரியவேண்டிய நிலை உருவாகுமென யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

மேலும் பல்கலைக்கழக சமூகத்தினர், தற்போது இலங்கையில் இரு அரசுகள் உள்ளன. தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அவர்களது அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத அரசியல் அமைப்புத்தான் காரணம். புலிகள் பயங்கரவாதிகள் என்றால் அரசின் பயங்கரவாத நிலையை ஏன் நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. அரசு எமது பிரச்சினையை அடக்க இராணுவ ரீதியாக தீர்க்க முயன்றதும் ஓர் அரச பயங்கரவாதம்தான். தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிக்க முற்பட்டபோதுதான் போராட்டம் வெடித்தது.

இன்று எமக்குத்தேவையானது எமது பிரதேசத்தை புனர்நிர்மாணம் செய்து கட்டியெழுப்ப ஓர் நிர்வாக அமைப்புத் தேவை தனிநாட்டுக் கோரிக்கைக்கு பதிலாக பூரண சமஷ்டித் தீர்வுதேவை. நாங்கள் எங்களையே ஆளும் சமஷ்டியும் அதற்கு பின்பலமாக அமையும் இடைக்கால அரசு அவ்வழி இறுதித்தீர்வை நோக்கிச் செல்கின்றது.

சமஷ்டி அரசியலில் இராணு[illegible] வடக்கு கிழக்கிலுள்ள விகிதாசாரப்படியே அமையவேண்டும். தென்னிலங்கை அரசு எமது சமாதான நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது என மேலும் கூறினார்.

இதேவேளை, இக்குழுவினரின் வருகைக்காக யாழ். நகரப் பகுதியில் பல இடங்களிலும் இராணுவத்தினர் வீதிக்கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இந்தக் குழுவினர் பாகிஸ்தான் செல்கின்றனர்.

(ரா)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.